செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௩] வள்ளுவர் ஆண்டு ௨௦௧௦, ஆடி, August, '79 [பரல்-௧௨

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

"செந்தமிழ்ச் செல்வி"
(இலக்கியத் திங்கள் இதழ்)
உறுப்பினர்கட்கு வேண்டுகோள்

அன்புடையீர் !

வணக்கம். செந்தமிழ்ச் செல்வியின் 53 ஆம் சிலம்பு இவ் விதழுடன் முடிந்து, வரும் ஆவணித்திங்கள் முதல் (செப்டம்பர் 12 ஆம் நாள்) 54 ஆம் சிலம்பு தொடங்குமாதலால் உறுப்பினர் வழக்கம்போல் தம்முடைய கையொப்பத் தொகையினை உடனடியாக அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம். அங்ஙனம், அனுப்பிவைக்காத உறுப்பினரின் ஆதரவை எதிர்நோக்கி அடுத்த சிலம்பின் முதல் இதழ் பெறுமதி அஞ்சலில் (V.P.P.) அனுப்பி வைக்கப்பெறும். அதனை வேண்டாதோர் முன்கூட்டியே அறிவித்து விடுதல் நலமாகும்.

ஆசிரியர்

செந்தமிழ்ச் செல்வி

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருங	திருவள்ளுவர் ஆண்டு உ0கo, ஆடி ஆகச்ஃடு 1979	பரல் கஉ

புலவர் புகழ் வளர்த்த கழகம் 3.

மூவா குறள்

நெல்லை, சென்னை, மதுரை, கோவை, குடந்தை, திருச்சி ஆகிய ஊர்களிலுள்ள கழகப் புத்தக விற்பனை நிலையங்களில் கழக ஆட்சியாளர் விரும்பி வேண்டிக் கொண்டபடி டாக்டர் மு. வரதராசனார் 1949இல் இயற்றிக் கழகம் அச்சிட்டு வெளியிட்டுவரும் 'திருக்குறள்' தெளிவுரையினை வாங்குவதற்கு வருகிறவர்கள் 'மூவா குறள்' கொடுங்கள் என்று கேட்பது பெரு வழக்காக இருந்து வருகிறது. 'மு. வ' என்று தனித்தனிக் குறில் எழுத்தாகச் சொல்லாமல் மூவா என்று நெட்டெழுத்துக்களைப்போல நீட்டி 'மூவா குறள்' என்று கேட்பது வியப்பையும் களிப்பையுந் தருகிறது. அப்படிக் கேட்கும்போது ஔவைப்பிராட்டியார் இயற்றிய கொன்றைவேந்தனில் உள்ள 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்னும் நீதித்தொடர் நினைவுக்கு வருகிறது. 'மூவா குறள்' என்பது மூவா மருந்துதானே? திருவள்ளுவமாலையில் சங்கப் புலவர் கவுணியனார் பாடிய,

> ''சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
> வந்த இருவினைக்கு மாமருந் து''

என்னும் வெண்பாவில் திருக்குறளை மருந்து என்று மட்டும் சொல்லாமல் மாமருந்து (பெருமருந்து) என்று சொல்லுகிறார் அன்றோ? 'மூவா மருந்து' என்பது தேவாமிழ்தம் ஆகும். எனவே 'மூவா குறள்' என்பது 'தேவாமிழ்தம்' ஆகுமன்றோ? ஆனால், டாக்டர் மு. வரதராசனார் எழுதியது திருக்குறளுக்குத் தெளிவுரைதான்.

ஆனால், மக்கள் கேட்பது 'மூவா குறள்'. இந்த வகையில் டாக்டர் மு. வரதராசனர் திருக்குறளுக்கு எழுதிய தெளிவுரை 'தேவாமிழ்தம்' போன்றதாகும். அதனாற்றான் மு. வ. எழுதிய திருக்குறள் தெளிவுரை வெளிவந்தபின் போட்டிப் பதிப்பாக வெளிவந்துள்ள பல பதிப்புக்கள் வாழாமற் போயின போலும்!

எனவே டாக்டர் மு. வரதராசனர் தாம் எழுதிய திருக்குறள் தெளிவுரையினால் தீந்தமிழ் உள்ளளவும் எல்லையில் புகழைப் பெற்று விட்டனர் என்று சொன்னால் அது மிகையாகாதன்றோ? கழக ஆட்சியாளரின் தமிழ்த்தொண்டிலும் தம்மிடம் காட்டிவந்த அன்பிலும் பிணிப்புண்டு, டாக்டர் மு. வ. அவர்கள் முதன் முதல் குழந்தைப் பாட்டுக்கள் எழுதிப் படிப்படியே சிறுகதைகள், சிறுவர் இலக்கணம், மொழிநூல், மொழிவரலாறு, இலக்கிய வரலாறு, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், கள்ளோ காவியமோ? முதலிய 88 நூல்களை இயற்றி எழுத்துலகில் பெரும் புகழ்பெற்றார். உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராய், தலைமைத்தமிழாசிரியராய், கல்லூரிப் பயிற்றாசிரியராய், பேராசிரியராய், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வாசகராய், தலைவராய், பல்கலைக்கழகத் துணைவேந்த ராய் அமர்ந்து கலையுலகில் ஒல்காப் பெரும்புகழ் பெற்றார். மேலும் பரிசுடன் புலவர் பட்டம், எம். ஓ. எல். பட்டம், டாக்டர் பட்டம், டி. லிட் பட்டம் ஆகியவற்றோடு அமெரிக்காவில் டி. லிட் பட்டமும் பெற்றவராய் மேன்மேலும் புகழ்பெற்றிருப்பினும் உலகப்பொது மறையாம் திருக்குறளுக்கு எழுதிய தெளிவுரையினால் சாவாப் பெரும்புகழைப் பெற்றுள்ளார் என்று சிந்தைமகிழ, செவிகுளிர, வாய் இனிக்கப் பண்பாடிப் பாராட்டலாமன்றோ!

'திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி' என்று செல்வியில் வெளியிடப்பெற்ற கட்டுரைகளைப் படித்திருப்பீர்கள். அப் பணிக்கு மணிமுடியாகத் திகழ்ந்து கழகத்துக்கு அழியாப் பெரும் புகழ் ஈட்டித்தருவது டாக்டர் மு. வ. இயற்றிய 'திருக்குறள் தெளிவுரையேயாகும்.' என்பதோடு கழக நூல் வெளியீட்டுப்பணிக்கும் அதுவே மணிமுடியாகும் என்று கூறி மகிழலாமன்றோ! டாக்டர் மு. வ. அவர்கள் பிரிவுற்றபோது புலவர்கள் பாடியனுப்பிய இரங்கற் பாக்கள் செந்தமிழ்ச்செல்வி 49ஆம் சிலம்பின்கண் வெளிவந்திருக் கின்றன. அவற்றிலிருந்து மேலே கூறப்பட்ட கருத்துக்களை மெய் பித்துக்காட்டுஞ் சில தொடர்களை இங்கே குறிப்பிடுவது பொருத்த மாயிருக்குமன்றோ!

"மூவாத் தமிழ்வளர்த்த மு. வ. தாம் எங்கே?"

—பேராசிரியர் தமிழண்ணல்

"நாவால் இனிய நாவலனே
　　நட்புக் கினிய பெட்புடையாய்
பாவால் என நு பாட்டுவந்தாய்
　　பண்பா டுடைய நண்பரசே
சாவால் உனக்குச் சாவுண்டோ
　　தமிழ்போல் வாழ்வாய் தமிழாலே
மூவாப் புகழின் வாழ்வோனே
　　மு. வ. என்னும் முத்தமிழா!"

"தெளிவுரை கோலித் திருக்குறளைத்
　　திகழச் செய்தாய் நாடெங்கும்."

—யோகி சுத்தானந்த பாரதியார்

"கருவில் திருவுடையான்
　　கன்னல் சுவை நடையான்
திருவள் ளுவர்குறள் நூல்
　　தெளிவுரையை வழங்கியவன்."

—பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ்

"மூவாத் தமிழென்பர் மூவா மருந்தென்பார்,
மூவா அமிழ்தென்பார் மூன்றன் உருவாக
'மூவா' இருக்கின்றார் முட்டில்லை என்றிருக்க
'ஆவா!' எனவார்க்க ஐயாநீர் சென்றீரே?"

—புலவர் இரா. இளங்குமரன்

"மூவா அமுதனைய மு. வ. மறைந்தாரா!
சாவா இலக்கியங்கள் தந்தவர்தாம் எங்குற்றார்?
திசைதோறும் திருக்குறள் தெளிவுரை வழங்கிடவே
இசைபெற்றார் கழகத்தின் ஏடுகண்டார் நாடுகண்டார்."

—கவிஞர் பு. ஆ. முத்துக்கிருட்டிணன்

"மூவாத் தமிழ்மொழியின் முப்பதினோ டைம்பதெனும்
தாவா இலக்கியங்கள் தந்தமகன்."

—வித்துவான் பா. சொ. லிங்கம்

"மூவாத் தமிழ்மகனை மு. வரதராசனை
ஓவாத நற்றமிழ்த்தொண் டேற்றினை—ஆவா!
எனைத்தமி ழன்னை யிரங்கியே ஏங்கல்
உனைத் கெளிதோ இப்பிரிவின் குற்று."

—புலவர் அரசு

———

இயற்கை ஓவியம்—கயந்தலையும் காரானும்

[இரா இளங்குமரன்]

பாம்புக்குப் பகை பருந்து; பாம்புக்குப் பகை கீரி; பாம்புக்குப் பகை மயில்—இப்படி எத்தனை எத்தனையோ பகைகள் பாம்புக்கு. இவற்றுக்கு மேல் பாம்புக்குப் பகை மாந்தர். அஞ்சி ஓடும் பாம்பையும் அடித்துக் கொல்லும் 'அருள் நெஞ்சம்' மாந்தர்க்குத் தானே உண்டு!

பாம்பு, பருந்தையோ, கீரியையோ, மயிலையோ தேடிப்போய்க் கடித்திருக்கிறதா? இல்லை! பிறகு ஏன் அவை பாம்பைக் கொல்ல வேண்டும்? வலியது மெலியதை வாட்டுவதும் உண்பதும் இயற்கை நிகழ்ச்சி! மாந்தர்க்கு என்ன வந்தது? பாம்பைக் கண்டு படையும் நடுங்கும்! மாந்தரைக் கண்டன்றோ அப்பாம்பு நடுங்குகின்றது! நடுக்கமும் நடுக்கமும் சேர்ந்தால் என்ன நடக்கும்? நடவாதது நடக்கும்! இப்படி நடப்பதுதான் பாம்பு கடிப்பதும், மாந்தர் அடிப்பதும்.

கடியாத பாம்பும் அடியாத மாந்தரும் இருந்தால் எப்படி இருக்கும்! அமைதி இருக்கும்; அச்சம் இராது; அல்லலும் இராது. இந் நிலையை உலகில் காண உயர்ந்தோர் விரும்பினர். அவர்கள், தீமையை வெறுத்துத் தீயதை வெருத திருவாளர்கள்.

நச்சுப் பாம்பும் பச்சைக் குழந்தையும் ஓடிவிளையாடுமா? விளையாடக் கண்டால் நாம் போடும் கூச்சலே தீமை ஆக்கிவிடுமே! ஆனால், சமய உலகம் நச்சுப் பாம்பைக் கழுத்தில் போட்டு, அழகு பார்த்தது; விளையாட விட்டுக் களித்தது; படுக்கவிட்டுப் பரவயப் பட்டது; அதன் பகைகளையும் உறவாட விட்டு உவந்தது! இலக்கிய உலகம் விட்டு வைத்ததா?

"சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் நினைத்திடுமங் கொருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடவரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்;"

இன்னும் கேட்கலாம் :

"புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை இணங்கும்;
கல்விடரில் வரிவேங்கை கடமாளுே டுறங்கும்;
கொல்லையின்மான் பிணையுமிளம் பிடியும்விளை யாடும்"

இவை 'மீனாட்சியம்மை குற'த்தில் கண்டவை.

'மாந்தாதா' என்பான் ஒரு வேந்தன். அவன் சோழ வேந்தருள் ஒருவன். அவன் புகழ், சோழர் புகழுக்கு முத்திரையாயிற்று. விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் என்னும் மூவர் புகழும் கூறும் மூவருலாவின் மூன்று கண்ணிகளில், மூவாப் புகழ் மாந்தாதாவின் ஒரோ ஒரு புகழ் கூறப்பட்டுள்ளது.

"ஆடு துறையில் அடுபுலியும் புல்வாயும்
கூடநீர் ஊட்டிய கொற்றவன்"

என்பது அது

புலியும் புல்வாயும் (மானும்) ஒருங்கு நீருண்ணச் செங்கோல் செலுத்தியவன் என்ருல், "அவன் நாட்டில் நலிப்பாரும், நலிவாரும் உளரோ?" என அவன் உயர்புகழ் உரைக்க வந்தது இச் செய்தி.

இயல்பாக நடப்பதை அல்லது நடக்கத் தக்கதை உள்ளது உள்ளவாறு கூறுதல் சங்கச் சான்ருேர்க்கு இயல்பு. அவர்கள் கண்ட இத்தகைய காட்சி ஒன்றைக் காண்போம்.

சங்கச் சான்ருேர் வளமான சொல்லாட்சியாளர்; அவர்கள் சொற்கலை வித்தகராக விளங்கியதுடன் சொல்லோவியராகவும் திகழ்ந்தனர். நாம் ஆண்யானை என்பதை அவர்கள் 'களிறு' என்றனர். பெண்யானை என்பதைப் 'பிடி' என்றனர். யானைக் குட்டியைக் 'கயந்தலை' என்றனர். பெண் எருமையைக் 'காரான்' என்றனர். மாந்தர்களின் ஆண் பெண் குழந்தைகளுக்குத் தனித் தனிச் சொற்கள் இருப்பதுபோல, விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூடச் சொற்களைப் படைத்துப் போற்றினர்.

ஒரு 'பிடி'; அது 'கயந்தலை மடப்பிடி'; குட்டிபோட்ட மெல்லிய பிடி; இளங்கன்றுடைய பசுவைக் 'கற்ரு' என்றும், 'புனிற்ரு' என்றும் வழங்குவது போல, இளங்கன்றுடைய யானையைக் 'கயந்தலைப்பிடி' என்று வழங்கினர். 'மடம்' என்னும் உயர்ந்த பண்பு

மகளிர்க்குத்தான் உண்டு என்ருல், இந்தப் பிடிக்குமே உண்டாம். களிறு என்ன கற்பித்ததோ அதனைத் தவருமல் கடைப்பிடிக்கும் பிடி ஆதலால் 'மடப்பிடி'யாம்.

களிறும் பிடியும் கயந்தலையுமாகக் காட்டிலே திரிய வேட்டையாளர் விடுவரோ? அவற்றை வீழ்த்துதற்கு ஆழ்குழி தோண்டியுள்ளனர். பொய்யாக மறைத்து அதில்போய் விழச்செய்ய வேண்டுமே, அதற்காக மரங்களை முறித்துப் போட்டு இனிய இலை தழைகளால் மூடியுள்ளனர். மாந்தர் ஆரும் அறிவுச் செயல் ஐயறிவு விலங்குக்கு வெளிப்படுமா? இனிய இலை தழைகளுக்கு ஆசைப்பட்டுச் சூழ்ச்சியறியா இளம்பிடி, புதை குழிமேல் கால் வைத்தது. மூடுதழைகள் பிடியைக் கீழே வீழ்த்தி மூடிக்கொண்டன. பிடியைத் தேடி ஓடிவந்த களிறு, குழிக்குள் விழ்ந்து கொடுமையாய் அலறும் பிடியைக் கண்டு கலங்கியது.

பிடி பட்ட கொடுமை களிற்றை வாட்டியது. தன் துயர் காணுத் தகவுடைய பிடி தனித்துயர் பட்டுத் துடிப்பதைக் களிற்ருல் காணப் பொறுக்கவில்லை. அதிர்ச்சியிலே அறிவை இழந்து தானும் குழிக்குள் விழுந்து ஆவது என்ன? மின் தாக்குதலுக்கு ஆட்பட்டவரைக் கட்டிப்பிடித்து விடுவிக்க முடியுமா? மின் துண்டிப்பு அன்ருே உடனே செய்தல் வேண்டும்?

காடே அதிரப் பிளிறியது களிறு. பிளிறல்! பிளிறல்! ஒழியாப் பிளிறல்! கூட்டம் கூட்டமாக ஓடிவந்தன பிளிறலைக் கேட்ட பிற யானைகள். தனியொரு யானைப் பிளிறலைக் கேட்ட காட்டு யானைக் கூட்டமே கூடிக் குறை தீர்க்க முந்துகின்றன. இந் நிலை மாந்தர்க்கும் உண்டோ? உண்டாயின் அவ் வுலகே இன்ப உலகம்!

யானைகள் எல்லாம் கூடினல் என்ன செய்ய முடியாது! மரங்களைச் சாய்த்தன. மண்ணைச் சரித்தன; குழியை மூடி நடைவழி உண்டாக்கின; களிற்றைப் பிடித்துக்கொண்டு பிடி வெளியேறியது! யானைக் கூட்டம் களிப்பால் ஆரவாரித்தது.

களிறும் பிடியும் கொண்ட களிப்பு நொடிப் பொழுதில் மறைந்தது. அவை சுற்று முற்றும் நோக்கின; வெருண்டு நோக்கின; வெதும்பி நோக்கின; ஓடித் தேடிப் பார்த்தன; அவற்றின் கயந்தலையை அங்கே காணவில்லை. பிடி பிழைத்தும் என்ன? களிறு காத்தும் என்ன? கயந்தலையைக் காணவில்லையே! வாராத்துயர் வந்து வாட்டியது! வந்த யானைக் கூட்டம் இதற்கு என்ன செய்ய முடியும்?

பிடியின் கதறல், களிற்றின் பிளிறல்; காட்டு யானைகளின் ஓட்டம்; அமளி குமளிப் பேரொலிகள்; முழக்கங்கள்; அதிர்ச்சி மிக்க செயல்கள்—இவையெல்லாம் கயந்தலைக்குப் புரியவில்லை. என்னவென்று தெரியவில்லை. அலைக்கழிப்புக்கு ஆட்பட்டு அச்சத்தால் வெருண்டு விரைந்து ஓடியது. காட்டையும் கடந்து ஆயர்கள் வாழும் குடியிருப்பு ஒன்றைச் சார்ந்தது.

கயந்தலை சிறியது; அண்மையிலே பிறந்தது; அதற்கு அடையாளம் அதன் செவ்வாய்! பிறந்த போழ்தில் இருந்த வாய்ச்சிவப்பு இன்னும் மாறவில்லை! அச் செவ்வாய்க் குழவியை விளையாட்டுச் சிறுவர் துன்புறுத்தவில்லை. பெரியவர்கள் மடக்கிப் பிடிக்கவில்லை. வெருட்டி யடிக்கும் நாயும் அதனை அலைக்கழிக்கவில்லை. மலை போலக் குவியல் குவியலாகக் கிடக்கும் எரு நிரம்பிய ஆயர் தெருவிலே, கட்டியுள்ள காரெருமைகளின் ஊடே களிப்போடு விளையாடித் திரிகின்றது கயந்தலை. வாங்கக் குடம் நிறைக்கும் வளமை வாய்ந்த எருமைகளின் பருத்த காம்புகளிலே சுரந்த பாலை, அவற்றின் கன்றோடு கன்றாகப் பருகித் திளைக்கிறது. காரெருமைகள் எல்லாம் கயந்தலையைக் கன்றெனக் காத்துப் பாலூட்டிப் போற்றுகின்றன.

காட்டுக் காதலரைக் காக்க ஒரு கூட்டம்! கலங்கியோடிய கயந்தலையைக் காக்க ஒரு கூட்டம். இத்தகைய காட்டரசும் நாட்டரசும் கூட்டரசாக விளங்க விரும்பினர் சங்கப்புலவர்! அவர் பெயரை அறிந்துகொள்ள விரும்புகிறோம். பெயரும் அறிய முடியா வெறுமையிலே தவிக்கிறோம். அவர் பாடிய பாட்டேனும் அகப்பட்டதே என மகிழ்கிறோம். அகப்பட்ட பாட்டோர் 'அகப் பாட்டே'யாகும்!

> ''கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
> களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
> ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி
> தாதெரு மறுகின் மூதூர் ஆங்கண்
> எருமை நல்லான் பெருமுலை மாந்தும்.''

—அகநானூறு. 165.

குறிப்புரை: பயம்பு - பள்ளம்; விளிப்படுத்த - கூப்பிட்ட; கம்பலை - ஒலி; வெரீஇ - அஞ்சி; ஒய்யென-விரைந்து; தாதெரு மறுகு- ஆயர்பாடித் தெரு; மூதூராங்கண் - பழைய ஊரிடத்து; மாந்தும் - பருகும். கயந்தலை என்பதற்கு 'மென்தலை' என்று பொருளும், பெருமுலை என்பதற்குப் 'பெறுமுலை' என்று பாட வேறுபாடும் காட்டுவர்.

உலகத்தை நடுங்கவைத்த விண்வெளி ஆய்வுக்கலம்

[என். கே. வேலன், பி. ஏ.]

''ஸ்கைலாப்'' என்ற ஆய்வுக்கலம் 'கேப் கார்னிவால்' என்ற இடத்திலிருந்து 14-5-73ல் வானவெளியில் அனுப்பப்பட்டது. அஃது ஒரு மாடிவீடுபோல் அமைக்கப்பட்டிருந்தது. ஆய்வாளர் களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. அது 93 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை வலம் வந்து கொண்டிருந்தது. 25மீட்டர் நீளமும் 6½மீட்டர் அகலமும் உள்ளதாக இருந்தது. அதனை அனுப்பத் தொடங்கியபோதே வெப்பத்தடை உடைந்து போயிற்று. மின்அடுக்குகள் சரியாக வேலை செய்யவில்லை. இவ் ஆராய்ச்சியை நிறுத்திவிடலாம் என்று அறிஞர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர். ஆயினும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் அதைச் சரிப்படுத்தி வானவீரர்களை அனுப்பி ஆய்வுகள் நடத்தினர். அதனை 412 கிலோமீட்டர் உயரத்திற்கு ஏற்றிப் பூமியைச் சுற்றி வருமாறு செய்தனர்.

ஐம்பது ஆண்டுகள் முதல் 500 ஆண்டுகள் வரை சுற்றக் கூடிய செயற்கைக் கோள்கள் இருக்கின்றன. 'ஸ்கைலாப்' என்ற விண்வெளி ஆய்வுக்கலம் 80 டன் எடையுள்ளதாக இருந்தது. அது 1983 வரை ஓடும் என எதிர்பார்த்தனர். கதிரவனில் கறுப்புப் புள்ளிகள் அதிகமாகும்போது அதிலிருந்து வெளிப்படும் வாயுக்களால் காற்றுமண்டலத்தின் அடர்த்தியும்வெப்ப மும் அதிகமாகின்றன. அதனால் விண்கலத்தின் ஓட்டம் தடைப்படு கின்றது. நிலவு பூமியை நெடுங்காலமாகச் சுற்றிவருகின்றது. பூமி கதிரவனைச் சுற்றி வருகின்றது. ஆண்டவனால் படைக்கப்பெற்ற இயற்கைக் கோள்கள் காற்றில்லாத வெற்றிடத்தில் சுழன்று வரு கின்றன. அவற்றிற்குத் தடை ஏதுமில்லை. ஆனால், மனிதனால் ஏவப்பட்ட செயற்கைக் கோள்களுக்குக் காற்றுத்தடை ஏற்படுகின் றது. அதனால் சிறிது சிறிதாக அவற்றின் ஓட்டம் குறைந்து பூமிக்கு வந்து சேர்கின்றன. 'ஸ்கைலாப்' என்னும் அமெரிக்க விண் கலம் நாள் ஒன்றுக்கு 1½ கிலோ மீட்டர் அளவு இறங்கி வந்து கொண்டிருந்தது. அது பத்து ஆண்டுகள் ஓடும் என்று எதிர் பார்த்தனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்னமேயே அது கீழே இறங்கிவிட்டது. 1979 சனவரியிலேயே அமெரிக்கர்கள் அது போகிற போக்கில் விட்டுவிட்டனர். மக்கள் தொகை அதிகமாக

இல்லாத இடத்தில் அதனைத் திருப்பிவிடலாம் என ஓர் அறிஞர் கூறினர். அதனை மெதுவாகவோ விரைவாகவோ விழச் செய்யலாம் என மற்றோர் அறிஞர் கூறினர். 10-7-79க்கும் 18-7-79க்கும் இடையில் விழக்கூடும் எனக் கூறினர். உலகில் முக்கால் பங்கு கடலாக இருப்பதால் அது கடலில்தான் விழும் என்றனர். அதி லிருந்து சிதறிவிழும் பகுதிகள் 6, 400 கி. மீ. நீளமும் 160 கி. மீ. அகலமும் உள்ள நிலத்திலும் விழக்கூடும் என்று வேறு சிலர் கணக்கிட்டுக் கூறினர்.

அமெரிக்காவில் ''அல்பாமா அவுஸ்டன்'' என்ற இடத்தி லிருந்து அதன் ஓட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனர். காற்று மண்டலத்தில் உராய்ந்து எரிந்துபோனது போக எஞ்சிய பகுதிகள் மணிக்கு 400 கி. மீட்டர் வேகத்தில் பூமியைத் தாக்கும் என அறிவிக்கப்பட்டது. இந்த விண்கலத்தில் இருந்து ஆராய்ச்சி கள் நடத்திய ஆலன்பீன் என்ற வானவீரர் 1974ல் பம்பாய் நகருக்கு வந்திருந்தார். அவர் இமயமலையை வானவெளியி லிருந்து படம் பிடித்து வைத்திருந்தார். அதில் ஒரு படத்தைத் தமது இந்திய நண்பருக்குக் கொடுத்தார்.

ஆய்வுக்கலம் நொறுங்கி வீழ்ந்தால் பெருந்தீங்கு விளையும் என்று உலக மக்கள் அஞ்சி நடுங்கினர். சிலர் தலையில் இரும்புக் கவசம் அணிந்துகொண்டனர். கடைகள் அடைக்கப்பட்டன. பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அச்சத்தினல் சிலர் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். புகை வண்டிகளிலும் பேருந்துகளி லும் இடம் கிடைக்காமல் மக்கள் காத்துக் கிடந்தனர். கல்லூரி மாணவர்கள் அமெரிக்க அலுவலகத்திற்குச் சென்று கூப்பாடு போட்டனர். அஞ்சி அஞ்சிச் சாகின்றவர்கள் ஆயுள் பாதுகாப்புச் செய்து கொண்டனர். வேறு சிலர்,

''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே''

என்ற பாரதியார் பாடலைப் பாடிக் கொண்டு வேலைக்குச் சென்றனர்.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்து அச்சத்தை அகற்று மாறு மக்களிடம் கேட்டுக்கொண்டனர். விண்கலத்தின் இறுதிப் பயணத்தின் பாதைகளை அமெரிக்க அறிஞர்கள் படம் வரைந்து வெளியிட்டனர். அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. பள்ளிகள் மூடப்பட்டன. விண்கலம் சுற்றியபோது ஒவ்வொரு

சுற்றுகக் குறைந்து பூமியை நெருங்கி வந்துகொண்டிருந்தது. எவ்வகையான கெடுதலும் வரக்கூடாதென்று கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. சிலர் மந்திரங்கள் போட்டனர். வேறு சிலர் தந்திரங்கள் செய்தனர். வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், உடைந்து நொறுங்கும் விண்கலத்தினுல் நமது நாட்டிற்குத் தீங்கு நேரிடாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறிவந்தனர். மருத்துவர்களும், காவலர்களும், தீயணைப்புப் படையினர்களும் எச்சரிக்கையாக வைக்கப்பட்டிருந்தனர். அவசரச் சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்திய நாட்டு நேரப்படி 11-7-79 அன்று இரவு 9-30 மணிக்கு விண்கலம் வெடித்துச் சிதறி இந்துமாக் கடலில் வீழ்ந்தது. 160 கி.மீ. உயரத்தில் அஃது ஓர் ஒளிப் பிழம்பாகத் தெரிந்தது. 112 கி. மீ. உயரத்தில் அது வெடித்துச் சிதறியது. ஆஸ்த்திரேலியாவின் தென்மேற்குப் பகுதியிலும் சில துணுக்குகள் வீழ்ந்தன. விண்கலம் வெடித்தபோது வாணவேடிக்கை போலிருந்தது. வெண்மை ஒளியுடன் வந்த விண்கலம் சிவப்பு ஒளியுடன் கீழே வீழ்ந்தது. எவருக்கும் அடிபடவில்லை.

வான வீரர்கள் மூன்று முறை இந்த ஆய்வுக் கலத்திற்குச் சென்று ஆராய்ச்சிகள் செய்தனர். வானவெளியில் மனிதன் நீண்டகாலம் வாழ முடியும் என்று கண்டுபிடித்தனர். கலப்பு உலோகங்களை வானவெளியில் எளிதாகச் செய்யலாம் என்பதையும் பூமியிலுள்ள கனிப் பொருள்கள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்கலாம் என்பதையும் கண்டறிந்தனர். ஆயிரக்கணக்கான படங்களைப் பிடித்துக்கொண்டு 8-2-74இல் திரும்பி வந்தனர். பல நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட 4000 செயற்கைக் கோள்கள் பூமியை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. உருசியர்கள் அனுப்பிய "சல்யூட்-6" என்ற ஆய்வுக்கலம் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றது. அதில் 150 நாள்கள் தங்கி இருந்து ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இக் கோள்கள் ஒன்றன்பின் ஒன்ருகப் பூமியில் விழுந்துகொண்டே இருக்கும். 'கோளறு பதிகம்' பாடினுல் இவை நம்மை விட்டு விலகிப் போய்விடும்.

விண்கல வீழ்ச்சி

வான்வெளியைச் சுற்றி வருமாறு விட்டகலம்
தான்பழுது பட்டுத் தடுமாறு—பான்மையினுல்
எக்கலைந்தே மாந்தர் இடருறுநாள் நள்ளிரவில்
மாக்கடலில் வீழ்ந்தது காண் மற்று

—இறை

கவிதையில் அறிவுறுத்தும் திறன்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

உயர்ந்த நோக்கம் :

கவிதை பொழுதுபோக்குதற்காகவே என்ற கருத்துத் தமிழர்க்குப் பொருந்தாது; தமிழ்க் கவிஞன் பொழுதுபோக்குக்குக் கவிதை பாடியவன் அல்லன்; அறிவுறுத்தி மாந்தரை உயர்விப்பதே தமிழ்க்கவிதையின் நோக்கம். தமிழ்க்கவிஞன் எழுதும் அனைத்துக் கவிதைகளும் வாழ்வின் குறிக்கோளைச் சுட்டிக் காட்டுவனவே. குறிக்கோளைச் சுட்டி நெறிப்படுத்தும் உயர்ந்த நோக்கம் அற்ற கவிதையைக் கவிதையென்று கொள்ள முடியாது. அறநெறிக்கு மாறுபட்ட கவிதை மெய்யான கவிதை அன்று என்று ஆங்கிலத் திறனாய்வாளரும் அறிவுறுத்துவது உண்டு.

பைந்தமிழில் பாலைப் பாட்டு :

மணல் நிறைந்த பாலைப்பகுதியைப் பாடும் தமிழ்க்கவிதைகள் பல உண்டு; சங்க நூற் கவிதைகளுள் பல இப் பகுதியைப்பற்றி இயம்புகின்றன.

சுடுமணல்; கடும் வெயில்; பட்டுப்போன மரங்கள்; அவற்றின் உலர்ந்த கிளைகள்; தண்ணீரே அற்ற கொடிய வழிகள்; முட்செடிகள்; அவற்றின் உலர்ந்த கொடிய நாக்குகளாகிய முட்கள். இவற்றைத்தானே பாலைநிலம் உடையதாக இருக்கும்! ஆனால், இவற்றைப்பற்றிச் சுவை பொதுளப் பாடுவது எப்படி? தமிழ்க் கவிதை இவற்றைப் பற்றிய இனிய இலக்கியம் என்று கூறத் தக்க தகுதியைப் பெற்றுள்ளது. பெருங்கடுங்கோ என்ற சங்கக் கவிஞன் இத்திணை ஒன்றினைப் பாடியே பெருஞ்சிறப்புப் பெற்றான்; **'பாலை பாடிய'** என்ற தொடர் இக் கவிஞனுடைய பெயர்க்கு முன் அக் காலத் திறனாய்வு உலகத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

நுட்பமான அழகு :

பெருங்கடுங்கோ - மணல் வெளியைப்பற்றிப் பாடிய வறட்சிப் பாட்டுக்களால் நல்ல சிறப்பு எய்தியது எவ்வாறு?

சுவையற்ற பகுதியை எவ்வாறு பெருங்கடுங்கோ சுவைப்படுத்துகிறான்? ஆம்; அதுவே நோக்கத்தால் விளைந்த

நுட்பமான அழகு. வாழ்க்கையை இணைத்து வாயாரப் பாடும் உயர் நோக்குப் பெற்ற பெருங்கவிஞன் பெருங்கடுங்கோ. எடுத்துக் காட்டாக ஓர் இடத்தைக் காணலாம்.

பட்ட மரம் பற்றிய செய்திகள் :

பட்ட மரங்களைப் பாவலன் காணுகின்றான்; வாடிய கிளைகளை நோக்குகின்றான். பொருள் இல்லாதவனுடைய இளமை வாடிக் கிடப்பதுபோல அக் கிளைகள் உள்ளன என்று சுட்டுகின்றான். அம் மரத்திற்குக் கீழே நிழல் இல்லை. நிழலின்மையை விளக்கி ஓர் உவமை படைக்கின்றான் பாவலன். பெருமைக் குணங்கள் பல வாய்ந்தவனுடைய பீடுடைய செல்வம் ஆயின் அது பலர்க்கும் நல்வாழ்வு தரும்; ஊருணி நீராய், மருந்து மரமாய், பயன் மரமாய் வள்ளுவன் கூறுவதுபோல அனைவர்க்கும் பயன்படும் உயர்ந்தவன் செல்வம். சிறியவனிடத்தில் சேர்ந்தாலோ செல்வத்தைப் பிறர் பயன் கொள்ளவே முடியாது; யாரையும் நெருங்க விடமாட்டான் சிறியவன். 'நன்றியில் செல்வம்' என்று அத்தகு சிறியவர் செல்வத்திற்கும் ஓர் அதிகாரம் தந்து விளக்கும் வள்ளுவம். 'நடுவூருள் நச்சுமரம் பழுத்ததுபோலும் நச்சப் படாதவன் செல்வம்.' பாலை நிலத்து மரங்களுக்கு நிழல் இல்லை என்று கூற வந்த கவிஞன், 'சிறியவன் படைத்த செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல் இல்லை' என்று அறிவுறுத்துகின்றான். அந்த உவமையின் ஆழத்தை எண்ணிப் பார்த்து இறும்பூது எய்துகின்றோம்; ஆம்; நிழலற்ற மரத்தைக்கூட அழகாக மாற்றிவிடுகின்ற கவிதைத் திறத்தை இவ்விடத்துக் காண்கின்றோம்.

மரங்கள் வேர் முதல் உச்சிக்கிளை வரை வெதும்பி நிற்கும் நிலையைக் கூறவருகின்றான். அடுத்து அதனைக் காணும்போது மக்கட் சமுதாயத்தில் உள்ள சில தீயோர் நினைவு கவிஞனுடைய சிந்தையில் எழுகின்றது. மனிதர் சிலர் தம் வாழ்வில் எத்தகையவர்க்கும் தீமை செய்வதே தம் பொழுதுபோக்காய்க் கொள்வாகள். அவர்கள் விருப்பம் எல்லாம் தீமையைத் துய்க்கும்போது பிறர்படும் துயரத்தைக் கண்டு மகிழ்வதே ஆகும். அத்தகு மனிதர்கட்குப் புகழ் என்றால் இன்னதென்றே அறிய இயலாது. அவர்களது இறுதிக் காலத்தில் அவர்கள் தாமும் கெடுவதுடன், தம்முடைய இளைஞரும் கெடுமாறு அழிவார்கள். இத்தகைய தீய மாந்தரையே வெதும்பிய அம் மரங்கள் சுட்டுகின்றன என்பது கவிஞனின் மதிப்பீடு. 'யார்கண்ணும் இகந்து செய்து, இசை கெட்டான் இறுதிபோல் வேரொடு மரம் வெம்ப' என்று சமுதாயத்தின் சீர்கேட்டுப் பகுதி ஒன்றை, மறைமுகமாகச் சுட்டிக்காட்டி உள்ளத்தே சிந்தனைப் போக்கை எழுப்புகின்றான் இவ்விடத்து.

கொடுங்கோலரசன் நாடு:

கொடுங்கோல் முறை உடைய கொற்றவர்களின் ஆட்சிக் கீழ் உள்ள நாடு முற்றிலும் உலர்ந்து வறட்சி பெற்றுவிடும்; கொலைத் தொழிலுக்குச் சிறிதும் அஞ்சாத அமைச்சர்களாக அக் கொடுங் கோல் மன்னர்க்குரிய அமைச்சர்கள் இருப்பார்கள்; அவர்கள் மக்களிடத்தே வரிப்பொருளை முறைப்படி வாங்கிடும் நிலையினர் அல்லர். மக்களை வருத்திப் பொருளைத் தண்டல் செய்வர் அத்தகு தீய அமைச்சர்; துன்பம் உற்ற குடிமக்கள் வருத்தத்தின் மிகுதியால் கூவுமாறு கொடுங்கோல் அரசன் நாடு எவ்விடத்தும் வறண்டு காணப்பெறும். அத்தகைய உயர் மரங்கள் உலர்ந்துவற்றி வறண்ட பகுதி அஃது என்று கூறி முடிக்கின்றான் கவிஞன்.

இவ்விடத்துப் பாலை நிலத்தைப் பாடுவான் போன்று, சமுதாயத்திற்கு நெறியறிவுறுத்தும் அருமைப்பாடு நம் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றது.

அகப்பொருட் செய்தி:

"இத்தகைய பாலைப் பகுதியை நோக்கி நீ பிரிந்து செல்லப் போகின்றாய் என்று நான் கூறினால், என் தோழி இறந்து விடுவாள்," என்று தோழி தலைவனை நோக்கித் தொடர்ந்து பேசு வதாகக் கற்பனை. படுக்கையிடத்துத் தழுவிய கைகளைச் சற்று நீக்கினும் தனிமைத் துன்பம் பெரிதும் அடைந்தவளாக எண்ணி வருந்தும் மென்மைத் தன்மை உடையவள் என்கின்றான்; விளையாட்டாக நீ பிரிவதாக விளம்பினாலும்கூடப் பொறாத மெல்லியள் என் தோழி என்கின்றாள். அடுத்து நின்னுடைய அருள் தழுவிய நோக்கத்திற் சிறிது வேறுபாடு தோன்றினும் வருத்தம் கொண்டு நெஞ்சழியும் மென்மை உடையவள் என்று தொடர் கின்றாள்.

"தலைவ! நீ பொருளைத் தேடுதலை விரும்பிப் போதலுற்றால், இவள் உயிர்தானும் போய்விடும் என்று நின்னுடைய பிரிவு ஆற்றா நிலையை நான் எடுத்துக் கூறினேன். அதற்கு இசைந்து, மணல் நெடு வழியிடத்துப் பிரிதலைக் கருதிய தலைவனும் பிரிதலைத் தவிர்ந் தான்; இனி நீ மெலிவு கொள்ள வேண்டா" என்று தோழி தலைவியை நோக்கிப் பேசி முடிக்கின்றாள். இந்த அழகிய கற்பனை கலித்தொகையில், பாலைக் கலியின் ஒன்பதாவது கவிதையாக மலர்ந்துள்ளது; பெருங் கடுங்கோ படைத்துள்ள இப் பாட்டுத் 'தமிழ்க் கவிதை அறிவுறுத்தும் இயல்புடையது; அகப்பொருளை உரைக்குங் காலும் சமுதாய நல்வாழ்வைத் தமிழ்க் கவிஞன் மறந்தறியான்; சுவையற்ற

பாலை வறியேயாயினும் கூட இனிய கவிஞரது நெஞ்சப் பாங்கின் உயர் பண்பாடு அதனை அழகு தழுவிய ஒன்றாக ஆக்கிடும் திறன் படைத்தது' என்று புலப்படுத்துதற்குத் தக்க சான்றாகும்.

அழகுறு கவிதையின் வடிவம் :

இவ்வழகிய பாலைக் கலிப்பாட்டின் முழுவடிவம் பின்வருமாறு:

"வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்துசெய் திசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்;
இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்
உடைபுநெஞ் சுகவாங்கே ஒளியோடற்பாள் மன்னோ;
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண்டு இனைபவள்;
முனிவின்றி முயல்பொருட்கு இறத்திநீ எனக்கேட்பின்
பனியகண் படல்ஒல்லா படர்கூர்கிற் பாள்மன்னோ;
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்பஞ்சிக் கலும்பவள்;
பொருள்நோக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருள்நோக்கம் மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாள்மன்னோ;
இருள்நோக்கம் இடையின்றி ஈரத்தின் இயன்றநின்
அருள்நோக்கம் அழியினும் அவலங்கொண்டு அழிபவள்;
எனவாங்கு,
வினைவெஃகி நீசெலின் விடுமிவள் உயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவேல் நெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே."

[இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, இவ் வகைப் பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீரெனக் கேட்பின் இவ்வகையாகற்பாலள் எனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை தலைமகட்குச் சொல்லியது. 'பிரமசாரியாய்க் காத்தனான் இளமைப் பயன் கொள்ளாது வறியனாயவன் இளமைச் செவ்வியின்றி இருந்தமாறு போல' என்பது வறியவன் இளமைபோல் என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர் எழுதும் உரை.]

———

அகநானூற்றில் 'பவத்திரி'

[பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.]

(முன் இதழ் ருஙசஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க காலத்தில் ஆந்திர நாட்டில் இருந்த பவத்திரியைத் தொண்டைமான் பொலம்பூண்திரையன் ஆண்டிருந்தான் என்று கருத இடமுண்டு. ஆந்திர நாட்டுக் கடற்பகுதியைத் தொண்டையர்களான திரையர்கள் ஆண்டதாகத் தெரிகின்றது. நெல்லூர் மாவட்டத்தில் கூடூர் தாலுக்காவில் ரெட்டிபாளையம் என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் பவத்திரி நாட்டின் காகந்தி என்ற கடற்கரைப்பட்டினம் கடல் கோளால் மறைந்ததாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். காகந்தி என்ற பெயர் சோழரின் மிகச் சிறந்த கடற்கரைப் பட்டினமான புகாரைக் குறித்து வழங்கினதை மணிமேகலை கூறியுள்ளது. சோழருடன் நெருங்கிய தொடர்புடைய தொண்டை நாட்டுத் திரையரும் தாங்கள் ஆண்ட பவத்திரி நாட்டின் சிறந்த கடற்கரைப்பட்டினமாகிய, பவத்திரி என்ற பட்டினத்திற்கு, காகந்தி என்ற பெயரைப் புகாருடன் ஒப்பிட்டுச் சூட்டியிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

இந்தப் பவத்திரியையே தொண்டைமான் பொலம்பூண் திரையன் சங்க காலத்தில் ஆண்டான். 25-2-1979ஆம் தேதிய தினமணிச் சுடரில் வந்த 'ப்ரளய காவேரி' என்ற கட்டுரையில் பழவேற்காடே 'பவத்திரி' என்றும் காகந்தி என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறிய செவிவழிச் செய்திகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தச் செய்திகள் வரலாறு, இலக்கிய அடிப்படையற்ற புராணச் செய்திகளாகும். ஆந்திர நாட்டில் இருந்த 'பவத்திரி' பட்டினம் கடல்கோளால் அழிந்ததன் பின்னர் அதன் நினைவாகப் பழவேற்காட்டைப் பவத்திரி என்றும் காகந்தி என்றும் மிகப் பின்னர் அழைத்திருக்கலாம். இந்த வழக்கு செவிவழிச் செய்தியாக வந்ததையே இந்தக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

சிரிபர்வதநாடு பெருங்கற்கால நாகரிக காலத்திலேயே (Megalithic) கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் இருந்ததை ஆந்திர நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் ரமேசன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் 'இந்து' நாளிதழில் (3-2-1979) குறிப்பிட்டுள்ளார். ஆதலின், சிரிபர்வதநாடு கி. மு. இரண்டாவது நூற்றாண்டிலிருந்தே இருந்தது தெரிகின்றது. இந்த சிரிபர்வத நாட்டின் கடற்கரைப் பகுதிகளை ஆண்ட தொண்டைய

ரான திரையர் தமிழ்மொழியின் மரபிற்கேற்பப் பெயரைப் 'பவத்திரி' என்று மாற்றி அழைத்ததாகத் தெரிகின்றது. இப் பெயரையே பின்னர் வந்த ஆந்திர நாட்டு ரெட்டிபாளையக் கல்வெட்டுச் செய்தியும் குறிப்பிட்டுள்ளது. தொண்டையர்க்கு முற்காலத்தில் சாதவாகனர்கள் அமராவதியைத் தலைநகராகக் கொண்டும் பவத்திரியைக் கடற்கரைப் பட்டினமாகக் கொண்டும் ஆண்டிருந்தனர் என்று கருத இடமுண்டு. சாதவாகனர்களுக்குப் பின்னர் வந்த மூன்றும் நூற்றுண்டு இக்குவாகு வம்ச அரசர்களின் அமராவதிக் கல்வெட்டில் 'பவத்திரி' என்பது 'சிரிபவத்தே' என்று பிராகிருத மொழியின் மரபில் அழைக்கப்பட்டதைக் காணலாம்.

அகநானூறு 'பவத்திரி' என்று அழைப்பது கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முற்பட்ட மரபாகும். 'சிரிபர்வத' என்ற வட மொழிப் பெயர் 'சிரிபவ' என்று பிராகிருத மொழியில் மாறிற்று. இந்த மரபைப் பின்பற்றியே அகநானூற்றில் 'பர்வத' என்ற வடமொழிப் பெயர் 'பவ' என்று மாறியது என்று கொள்ளலாம். அல்லது பிராகிருதப் பெயரை அப்படியே அகநானூறு எடுத்துக் கூறியது என்று கருதுவது பொருத்தமானதாகும். 'பர்வதசிரி'யின் ஒட்டுச் சொல்லான 'சிரி' தமிழில் திரிந்து 'திரி'யாக மாறி 'பவத்திரி' என்ற பெயர் தோன்றியது. மூன்றும் நூற்றுண்டில் இக்குவாகு வம்சத்தினரின் அமராவதிக் கல்வெட்டில் 'சிரிபவத்தே' 'விஜயபுரிய புதெசா' என்று சொல்லப்பட்டிருப்பதால் 'சிரிபவத்தே' என்ற பெயரே 'பவத்திரி' என்று அகநானூற்றில் வழங்கியது தெளிவாகத் தெரிகின்றது. சங்க நூல்களில் பிராகிருத மொழி மரபைப் பின்பற்றிய சில வழக்குகளைக் காணலாம்.

பௌத்தர்களின் செல்வாக்கு சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் ஆந்திர நாட்டில் புகுந்ததால் பிராகிருத மொழிப் பெயர்கள் பரவலாயின. சாதவாகனப் பேரரசில் அரசிகள் பௌத்த மதத்தைப் பின்பற்றியதைக் கவனிக்க வேண்டும். அரசன் பிராமணனாகவும் அரசி பௌத்த மதத்தினளாகவும் இருந்ததைக் காணலாம். நாக அரசிகளை மணந்து பிராமணர்கள் அரசுப் பதவி பெற்றதைத் தெளிவாகக் காணலாம். இவ்வாறு 'பிரம்ம சத்திரியர்கள் என்ற புதுக்குலத்தை உண்டுபண்ணி, பிராமணர்கள் பழங்குடி அரசுகளைத் தங்களின் ஆதிக்கத்தில் கொண்டுவந்ததே சங்க காலத்திற்குப் பிற்பட்ட தென்னிந்திய அரசுகளின் வரலாருகும் என்பதை மிகவும் கவனிக்க வேண்டும். பவத்திரி என்ற கடற்கரைப் பட்டினத்தின் பெயர் பிராகிருத மொழியிலிருந்து வந்ததாகும். பவத்திரி என்பது சிரிபர்வதம் என்று வடமொழியில் வழங்கிற்று. சிரி என்ற சொல் திரி என்று பண்டைக் காலத்தில் தமிழில்

வழங்கியதாகத் தெரிகின்றது. அரிக்கமேட்டு மட்பாண்ட ஓடுகளில் சிரி என்பது திரி என்று வழங்கப்பட்டதாக அறிஞர் ஐ. மகாதேவன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் எழுதியுள்ளார்.

அறிஞர் சிலர் இந்தத் 'திரி' என்ற சொல்லே திரு என்று ஆகியதாகவும் கூறுவர். சங்க காலத்திலேயோ அதற்கு முன்னரோ 'பவத்திரி' என்ற ஊர் 'சிரிபர்வதம்' என்று வடமொழியில் வழங்கப் பட்டது. இந்தப் பெயர் சாதவாகனர் காலத்தில் 'பர்வத சிரி' என்று வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. 'பர்வதஸ்ரீ' என்ற வட மொழிப் பெயரே 'பவத்திரி' என்று சங்ககாலத்தில் பிராகிருத மொழியின் பெயரை ஒட்டி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. இன்று 'ஸ்ரீ' என்ற ஒட்டுச் சொல், ஓரெழுத்துச் சொல் ஆந்திர நடிகைகளின் பெயரின் முன்னர் வருகின்றது. ஆனால், சங்க காலத்தில், ஆந்திர சாதவாகனர் காலத்தில் இந்த ஒட்டுச்சொல் சாதவாகன அரசிகளின் பெயரின் பின்னர் வழங்கப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

அமராவதித் தூணில் காணப்பட்ட ஒரு கல்வெட்டில் (Epigraphica Indica Vol. XXIV) பிராகிருத மொழியில் 'பூர்வசைலியான' என்ற வடமொழிப் பெயர் 'புவசைலியான' என்று வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். 'பூர்வ' என்பது 'புவ' என்று மாறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். 'பருவதஸ்ரீ' என்ற பெயரே பவத்திரி என்று பிராகிருத மொழியின் மரபிற்கேற்பச் சங்க காலத்தில் வழங்கப்பட்டது. 'பூர்வ' என்பது 'புவ' என்று பிராகிருதத்தில் மாறினது போல 'பர்வத' என்பது பிராகிருதத்தில் 'பவ' என்று மாறித் தமிழில் வந்தது. 'பவ' என்ற சொல்லுடன் திரி என்ற ஒட்டுச்சொல் சேர்ந்து பவத்திரி என்ற பட்டினப் பெயர் வழங்கியது. பரிபாடலில் 'பதிவிரதம்' என்ற பெயர் 'பதிவதம்' என்று வழங்கிற்று. சங்க காலத்தில் பிராகிருத மொழியின் செல் வாக்கால் 'பர்வதஸ்ரீ' என்ற வடமொழிப் பெயர் பிராகிருதமொழியில் 'பவசிரி' என்றும் அதுவே தமிழில் 'பவத்திரி' என்றும் வழங்கப் பட்டதாகத் தெரிகின்றது.

இது சார்பாக இன்னொரு செய்தியும் ஆராயத்தக்கது. இன்று தமிழகத்தின் தொல்லை எல்லையாக இருக்கும் வேங்கடம் ஆந்திர நாட்டில் உள்ளது. சங்க காலத்தில் புல்லி என்ற மன்னன் வேங் கடத்தை ஆண்டான். அவன் கள்வர் மரபினன் என்பது சங்க நூல்களிலிருந்து தெரிகின்றது.

இந்தப் 'புல்லி' என்ற பெயர் பிற்காலத்திய சாளுக்கியப் பேரரசனின் பெயரான 'புலிமாய்' என்பதுடன் தொடர்புடையது என்பதைக் கவனிக்கவேண்டும். 'புலிமெய்' என்பதே 'புலிமாய்' என்று மாறிவிட்டது. புலியுடன் தொடர்புடைய பெயரானதால் புலியைக் கொன்று புலியின் தோலை அணிந்தவன் என்ற பெயரைக் கொண்டான் என்றும் புலியை மாய்த்துப் 'புலிமாய்' என்ற பெயரைக் கொண்டான் என்றும் கருதலாம்.

புல்லி என்ற சொல்லும் புள்ளி என்ற சொல்லும் மக்கள் வழக்கில் மாறி வருபவை. புள்ளியுடைய புள்ளிப் புருவைப் 'புலிப்புரு' என்று நாட்டு மக்கள் அழைக்கின்றனர். புள்ளியை உடைய விலங்கைப் 'புள்ளி' என்று பண்டு கூறிய முந்திய திராவிடன் அதையே பின்னர்ப் 'புல்லி' என்றும் புலி என்றும் சுருக்கிச் சங்ககாலத்தில் அழைத்தான். புலிமாய் என்ற சாளுக்கிய அரசனின் பெயர் தூய திராவிடப் பெயர் என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். 'மை' என்ற கன்னடச்சொல் மெய்யைக் குறிக்கும். புலியை மாய்த்தவன் (புலிமாய், புலிமாயி) அல்லது புலிமெய்யை உடையவன் என்று பொருள் கூறலாம். புலியைக் கொன்று அதன் தோலை அணிந்தான் என்றும் பொருள் கூறலாம்.

ஒய்சளர், போசளர் என்ற கன்னட நாட்டு மலைவாழ் மன்னன் ஒரு முனிவனின் ஆணையால் புலியைக் கொன்ற மன்னர்களின் மரபில் வந்தவனுவன் என்று வரலாற்று அறிஞர் கூறுவர். புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்களைக் கள்வர் மரபினராகக் கூறுவர். இந்த அரசு பரம்பரையில் எத்தனை புலியைக் கொல்கின்றுர்களோ அத்தனையும் அரசனுக்கும் பெருமை தருவதாகக் கருதும் நம்பிக்கை அண்மைக் காலம்வரை இருந்தது. கள்ளர் இனத்தில் இன்றும் உள்ள உட்பிரிவுகளில் சிங்கத்தான், செம்புலியான் என்ற பெயர்கள் வழங்குவதைக் காணலாம். ஆதலின் கள்ளர் மரபினரின் பரம்பரைச் செய்திகளில் புலி மிகவும் முக்கியமானது என்பதைக் கவனிக்கவேண்டும். வேளிர் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் மு. இராகவையங்காரும், பின்னுல் இதை ஆராய்ந்த அறிஞர் மகாதேவனும் ஒய்சள மன்னர் வேளிர் வழியினர் என்று கூறினுர்கள். அதில் ஐயமேயில்லை.

ஈராசு அடிகள் (Rev. Heras) எப்படி சுமேரியர், பாபிலோனியர், சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகத்தினர் எல்லாம் 'புலிகடிமாலை'ப் போற்றினுர்கள் என்பதை விளக்கியுள்ளார். அந்த மிகப் பண்டைய மரபைப் பின்பற்றி ஒய்சள வம்சத்திற்கு மிகப் பின்பட்டவனுன, ஒய்சள நாட்டை ஆண்டவனுன திப்பு சுல்தான்கூடப் புலித்

தோலை அணிந்து 'புலிமாயி' பரம்பரையில் வந்தவனாகக் கன்னட நாட்டு மக்களுக்குத் தன் இராச பரம்பரையைக் காட்டினான். அதுவே 'இரம்சான்' என்ற இஸ்லாமியப் பண்டிகைக் காலத்தில் 'புலிவேடம்' என்ற ஆட்டம் நடக்கக் காரணமாகலாம். புலிவேடம் போடுகிறவன் புலியின் தன்மையை, வீரத்தை அடைகின்றான் என்ற நம்பிக்கையில் இந்த ஆட்டம் ஆடப்படுகின்றது. புல்லி என்ற சங்ககாலத் தலைவன் கள்வர், கள்ளர் மரபினன் என்பதும் அவன் வேளிர் இனத்தினன் என்பதும் வேளிர் வரலாற்றிலிருந்து தெளிவாகின்றது. புல்லியும் தொண்டைமானும் ஆண்டபோது பவத்திரி சிறந்த நகரமாகத் தொண்டையர் நாட்டில் இருந்திருக்க வேண்டும். புல்லி ஆண்ட நாடே தொண்டை நாடு என்று சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. இளந்திரையனும் ஆண்டதாகவும் புல்லியும் ஆண்டதாகவும் தொண்டை நாடு கூறப்பட்டுள்ளது. இவர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்பதைத் தெளிவாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சாதவாகனர்களுக்கும் தமிழ் மன்னர்களுக்கும் தொடர்பு இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறியுள்ளது தெரிந்ததே. ஈழத்தில் கஜபாகு, தமிழ்நாட்டில் சேரன் செங்குட்டுவன், ஆந்திர நாட்டில் சாதவாகன அரசன் ஆகியவர்கள் ஒரே காலத்தில் ஆண்டனர்—என்பதைப்பற்றிப் பேராசிரியா நீலகண்ட சாத்திரியார் காட்டிய சான்றுகளை ஒப்புக்கொண்டாக வேண்டும். சிலப்பதிகாரத்தில் சாதவாகனரின் பேரூரான அமராவதியில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு பூதம் புகாரில் நிறுவப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளதையும் அகநானூற்றில் காமூர்ப்பூதம் (அகம் 365) கூறப்பட்டதையும் கவனிக்கவேண்டும். பிற்காலத்தில் சாளுக்கியர் காலத்தில் வாதாபி கணபதியைச் சிறுத்தொண்டர் கொண்டு வந்ததையும் கவனிக்க வேண்டும்.

பிற்காலத்தில் இராசராச சோழன், இராசேந்திர சோழன் ஆகிய பேரரசர்களின் காலத்தில் கல்யாணி நகரத்திலிருந்து சில சாளுக்கிய சிற்பங்கள் தஞ்சைக்குக் கொண்டுவரப்பட்டதையும் கவனிக்கவேண்டும். ஆதலின் தமிழ்நாட்டுடன் ஆந்திர நாட்டுக்கும், பின்னர்ச் சாளுக்கிய நாட்டுக்கும் இருந்த தொடர்பை மறந்து சங்க இலக்கியத்தையும் தமிழ் இலக்கியத்தையும் ஆராய்வது தவறு.

சங்கத் தமிழரோடு தொடர்புடைய சாதவாகன அரசர்களின் பட்டத்தரசிகளின் பெயர்கள் 'சிரி' (ஸ்ரீ) என்ற கடைச் சொல்லுடன் முடிவடைவதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. இக்குவாகு

வம்சத்தின் மூன்ரும் நூற்ருண்டுக்குரிய அமராவதிக் கல்வெட்டில் 'சிரிபவத்தே விஜயபுரிய புவதெசா' (Sripavate Vijaya Puriya Puva desa) என்று கூறப்பட்டுள்ளது. அமராவதிக் கல்வெட்டில் விஜயபுரியும் சிரிபர்வதமும் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது. அமராவதியைப்பற்றிச் சிலப்பதிகாரமும் கூறியுள்ளது. 'அமராவதி உந்தனுக்கு அழகான கலியாணமாம்' என்று தொடங்கும் கொங்கு நாட்டுப் பாடலை நான் கேட்டிருக்கிறேன். இஃது அமராவதியின் சிறப்பை இன்றும் நாட்டுப் பாடல் கூறுவதைக் காட்டுகின்றது. சிரிபர்வத அரசர்களின் கல்வெட்டுக்களில் தமிழ்ப் பெயர்கள் தாங்கிய தலைவர்களின் பெயர்களைக் காணும்போது நாம் வியப்புருமல் இருக்க முடியாது. அமராவதிக் கல்வெட்டில் விஜயபுரியும் சிரிபர்வதமும் ஒன்றே என்று கூறப்பட்டுள்ளது. சிரிபர்வத அரசர்களின் கல்வெட்டுக்களில் Ebuvale (எஃகு), Adavi Camtasiri, (ஆடவி), Damila Kanha (தமிழக்கண்ணன்) என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இந்தப் பெயர்கள் ஆந்திர நாட்டில் பண்டைத் தமிழனுக்கு இருந்த செல்வாக்கைக் காட்டுகின்றது. ஆந்திர நாட்டு வரலாற்றை எழுதிய டாக்டர் கோபாலாச்சாரி என்ற அறிஞர் இப்பெயர்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டித் தமது நூலில் எழுதியுள்ளார். தமிழக்கண்ணன் என்ற பெயர் 'நூற்றுவர் கன்னர்' என்ற சிலப்பதிகாரப் பெயருடன் ஒத்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆந்திராவில் 'அள்ளூர' (Allura) என்ற இடத்தில் காணப்பட்ட கி. பி. இரண்டாம் நூற்ருண்டுக்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டில் 'மகாதலைவரையும்' (Mahatalavare) மற்றும் ஓர் அரசரையும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். கி. பி. முதல் நூற்ருண்டிற்கு முன்னரேயிருந்து பின்னர்க் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிலும் தமிழரின் பண்பாடு, மரபு ஆந்திரத்திலும் பரவியிருந்தமை இக் கல்வெட்டு காட்டுகின்றது. இது போன்றே ஈழ நாட்டிலும் குதிரை வணிகர்களின் தமிழ்ப்பெயர் அதே காலத்தில் காணப்படுவதை மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் எழுதியதிலிருந்து தெரிகின்றது.

சாதவாகன அரசர்கள் கலப்பினக்குடியினர் என்று வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இந்தக் குடியில் அரசன் பிராமணனாகவும் பட்டத்தரசி சத்திரிய சாதியாகவும் இருந்திருந்ததைக் குறிப்பிட்டுள்ளனர். பிராமணர் அரசுப் பதவிக்கு ஆசைப்பட்டபோது சத்திரியப்பெண்ணை மணந்தனர். சங்ககாலத்துக்கு அடுத்து இந்த வகையாகத் தென்னிந்தியப் பழங்குடி அரசுகளைப் பிராமணர்கள் தங்களின் மேலாண்மைக்குக் கொண்டு வந்ததற்குச்

சான்று சில அரசுப் பரம்பரை வரலாறுகளிலிருந்து தெரிகின்றது. கடம்பர் என்ற பழங்குடியினரின் அரசை மயூரசர்மன் என்ற பிராமணன் மணத்தொடர்பால் 'பிரம்மசத்திரிய' அரசாக மாற்றினன்.

பல்லவர்களைப்பற்றிய வரலாற்றுக் கதைகளும், பாணராட்டிர அரசு வரலாற்றுக் கதைகளும் இந்தவகை பிரம்மசத்திரிய அரசு மரபுகளைக் காட்டுகின்றன. சாதவாகன அரசனுன 'சிரிசாந்த மூலன்' என்பவனின் மனைவியின் பெயர் 'சாந்தசிரி' என்று கல்வெட்டுக்களில் வருகின்றது. இந்தப் பெயர் மாற்றம் சங்க காலத்தில் ஆந்திர நாட்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. ஆதலின், 'பவத்திரி' என்று வரும் அகநானூற்று ஊர்ப்பெயர் ஸ்ரீபர்வதம், பர்வதஸ்ரீ என்ற பெயரே என்பதில் ஐயமில்லை. சாதவாகனருக்குப்பின் வந்த 'இக்குவாகு' மரபினருக்கும் தமிழகத்திற்கும் தொடர்பு இருந்ததைப் புறநானூறு 392ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

> ''விருந்திறை நல்கி யோனே யந்தரத்
> தரும்பெற லமிழ்த மன்ன
> கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே.''

இந்தப் பாடல் (392) அதியமான் நெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியதாகும். ஓர் உயரிய, சிறந்த வகைக் கரும்பை அதியமான் ஆந்திர நாட்டில் இருந்து தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். இக்குவாகு மரபு கரும்பின் பெயர் அடிப்படையாகத் தோன்றியது. அதியமான் மரபினர் சேர அரசர் பரம்பரையில் உதியன் மரபில் வந்தவர்களாவர். உதியன் என்ற பெயரே அதியன் என்று மாறியிருக்கலாம்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அதியன் என்ற பெயர் வடமொழியிலிருந்து, அதிகாரி என்ற பெயரிலிருந்து வந்ததாகக் கூறியது ஐயத்திற்குரியது. உதியமரம் பிற்காலத்தில் ஒதிய மரம் ஆயிற்று. ஆதலின் சேர மரபைச் சேர்ந்த அதியமான் காலத்தில் ஆந்திர நாட்டில் இருந்து ஒரு சிறந்த இனக்கரும்பு, அமிழ்து போன்ற இனிய கரும்பு தகடுருக்குக் கொண்டுவரப்பட்டுப் பயிரிடப்பட்டது. இந்த அதியமான் அரசன் இக்குவாகு மன்னன் காலத்தினனுவான் என்று கருதலாம். இக் காலம் ஏறக்குறைய மூன்ருவது நூற்ருண்டாகலாம். இந்த மன்னன் அதியமான் நெடுமானஞ்சி என்பதைப் புறநானூறு 99ஆம் பாடல் காட்டுகின்றது.

"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல" புறம் 99 (1-4)

இக்குவாகு மரபினர் ஆண்ட நாட்டிலிருந்து கொண்டுவந்த சர்க்கரை நிறைந்த கரும்பை, அதியமான் நெடுமானஞ்சியின் முன்னோர்கள் விண்ணகத்திலிருந்து இவ் வுலகத்திற்குக் கொண்டு வந்ததாகக் கூறப்பட்டதிலிருந்து அதியமான் நெடுமானஞ்சியின் காலம் இக்குவாகு வழியினர் ஆண்ட காலம் என்று கருதலாம். கரும்பின் பெயர் அடிப்படையாக இந்த இக்குவாகு மரபின் பெயர் இருப்பதால் அதியமான் மரபினர் ஆட்சி செய்த காலமும் மூன்றும் நூற்றுண்டாகவே இருக்கலாம். கரும்பு ஆலையும் சர்க்கரையும் சங்க காலத்திலேயே சொல்லப்பட்டுள்ளன. கரும்புல் என்ற பெயரே கரும்பு என்று திரிந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். கணம்புல் என்ற சொல் பிற்காலத்தில் கண்புல், கம்புல் என்றும் அதையொட்டிய புல்லான கம்புக்கும் வழங்கியதையும் காணவேண்டும். கண்புல், கம்புல் என்பதே பிற்காலத்தில் கம்பு ஆயினதைக் கவனிக்கவேண்டும்.

ஆதலின் சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்டும் தொடர்ந்து ஆந்திர நாட்டுக் கடற்கரைப் பகுதியை ஆண்ட தொண்டையர்கள், சாதவாகனர்கள், இக்குவாகு அரசினர் ஆகியோருடன் தமிழ் மன்னர்கள் தொடர்புகொண்டு இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. சங்க காலத்தில் ஆந்திர நாட்டில் இருந்த பவத்திரியைத் தொண்டைமான் பொலம்பூண்திரையன் ஆண்டிருந்தான் என்று கருத இடமுண்டு. ஆந்திர நாட்டுக் கடற்கரைப் பகுதியைத் தொண்டையர்களான திரையர்கள் ஆண்டதாகத் தெரிகின்றது. ஆனல், பௌத்தர்களின் செல்வாக்கு சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் ஆந்திர நாட்டில் புகுந்ததால் பாலி மொழிப் பெயர்கள் பரவலாயின. பவத்திரி என்ற கடற்கரைப் பட்டினத்தின் பெயர் பாலி மொழியிலிருந்து வந்ததாகும். பவத்திரி என்பது சிரிபர்வதம் என்று வடமொழியில் வழங்கிற்று.

சிரி என்ற சொல் திரி என்று பண்டைக்காலத்தில் தமிழில் வழங்கியதாகத் தெரிகின்றது. அரிக்கமேட்டு மட்பாண்ட ஓடுகளில் சிரி என்பது திரி என்று வழங்கப்பட்டதாக அறிஞர் ஐ. மகாதேவன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் எழுதியுள்ளார். சிலர் இந்தத் 'திரி' என்ற சொல்லே 'திரு' என்று ஆகியதாகக் கூறுவர். சங்க காலத்தி லேயோ அதற்கு முன்னரோ 'பவத்திரி' என்ற ஊர் 'சிரிபர்வதம்

என்று வடமொழியில் வழங்கப்பட்டது. இந்தப் பெயர் சாதவாகனர் காலத்தில் 'பர்வதசிரி' என்று வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. 'பர்வதஸ்ரீ' என்ற வடமொழிப் பெயரே 'பவத்திரி' என்று சங்க காலத்தில் பாலி மொழியின் பெயரை ஒட்டி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இன்று 'ஸ்ரீ' என்ற ஒட்டுச்சொல், ஓரெழுத்துச்சொல் ஆந்திர நடிகைகளின் பெயரின் முன்னர் வருகின்றது. ஆனால், சங்க காலத்தில் ஆந்திர சாதவாகனர் காலத்தில் இந்த ஒட்டுச்சொல் சாதவாகன அரசிகளின் பெயரின் பின்னர் வழங்கப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. 'பருவதஸ்ரீ' என்ற பெயரே பவத்திரி என்ற பாலி மொழியின் மரபிற்கேற்ப சங்ககாலத்தில் வழங்கப்பட்டது. பரிபாடலில் 'பதிவிரதம்' என்று வரும் பெயர் 'பதிவதம்' என்று மாற்றப்பட்டது. சங்க காலத்தில் பாலி மொழியின் செல்வாக்கால் 'ஸ்ரீபர்வதம்' என்ற வடமொழிப் பெயரும் 'பர்வதஸ்ரீ' என்ற பிராகிருதப்பெயரும் 'பவத்திரி' என்று பாலி மொழியின் மரபில் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

நெல்லூர் மாவட்டத்தில் கூடூர் வட்டத்தில் இரெட்டிபாளையம் என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் பவத்திரி நாட்டின் காகந்தி என்ற கடற்கரைப் பட்டினம் கடல் கொள்ளப் பட்டதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். காகந்தி என்ற பெயர் சங்க காலத்தில் மிகச் சிறந்த சோழ நாட்டின் கடற்கரைப் பட்டினமான புகாரைக் குறிக்கும். இதே பெயரைச் சோழருடன் நெருங்கிய தொடர்புடைய தொண்டையரும் தாங்கள் ஆண்ட பவத்திரி நாட்டின் கடற்கரைப் பட்டினத்திற்குப் பெயராகச் சூட்டிய தாகத் தெரிகின்றது. சங்க காலத்தில் தொண்டையர் ஆண்ட போது சிரிபர்வத நாட்டின் தலைநகர் அமராவதியாகவும் பவத்திரி என்ற ஊர் கடற்கரைப் பட்டினமாகவும் இருந்திருக்கின்றது. இந்தப் பவத்திரியையே தொண்டைமான் பொலம்பூண்திரையன் ஆண்டான் என்று கருத இடமுண்டு. இந்தப் பவத்திரி சங்க காலத்தில் சிறப்புடன் இருந்தது. ஆனால், பின்னர்க் கடல் கோளால் இந்தப் பவத்திரி அழிந்ததையே கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

காவிரிப் பூம்பட்டினத்தைக் குறித்து மணிமேகலை அழைத்த பெயரையே பவத்திரிக்கும் தொண்டையர்கள் சூட்டியிருப்பதால் இந்த மரபு தமிழக வழக்கிலிருந்து பின்பற்றியதாகத் தெரிகின்றது. காகந்தி என்ற பெயரிலிருந்து சோழர் பெயரிட்ட மரபை ஒட்டித் தொண்டையர் பவத்திரியைத் தமிழ்மொழிப் பெயரையே பின்பற்றிக்

காகந்தி என்று பெயரிட்டதாகத் தெரிகின்றது. 25-2-1979 ஆம் தேதியன்று வந்த தினமணிச் சுடரில் 'ப்ரளய காவேரிக்' கட்டுரையில் பழவேற்காடே 'பவத்திரி' என்றும் காகந்தி என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி மிகப் பிற்காலச் செய்தியாகும். கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் இல்லாத செய்தியாகும். சிரிபர்வத நாடு பெருங்கற்கால நாகரிக காலத்தில் (Xcegalitic) கி.மு. இரண்டாவது நூற்றூண்டில் இருந்ததை ஆந்திர நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் மகேசன், ஐ. ஏ. எஸ்., கண்டுபிடித்து 1979 பிப்ரவரி மூன்றும் நாள் 'இந்து' நாளிதழில் குறிப்பிட்டுள்ளார். ஆதலின், சிரிபருவத அரசு கி.மு. இரண்டாம் நூற்றூண்டிலிருந்தே இருந்தது விளங்குகின்றது. இதே சிரிபர்வத நாட்டைச் சேர்ந்த கடற்கரைப் பகுதிகளைச் சங்க காலத்தில் தொண்டையர் ஆண்டபோது தமிழ் மரபிற்கேற்ப மாற்றிப் 'பவத்திரி' என்று வழங்கினதையே அகநானூறு குறிப்பிடுகின்றது. இப் பெயரையே பின்னர்க் கல்வெட்டுச் செய்தியும் குறிப்பிடுகின்றது. இஃது அதற்கு மிகவும் பின்னர் வழங்கிய புராணச் செய்தியாகும். பழவேற்காடே பவத்திரியாகக் கூறப்பட்டது.

பழவேற்காடு சங்க காலப் பவத்திரியாக இருந்திருக்க முடியாது. இச் செய்தி பண்டைய வரலாற்றுச் செய்திக்கிடையே ஒட்டி வந்த மரபுச் செய்தியாகும். பவத்திரியைத் தொண்டையர்கள் கி.பி. இரண்டாம் நூற்றூண்டிலோ, மூன்றும் நூற்றூண்டிலோ ஆண்டிருக்கலாம் என்று தெரிகின்றது. தெளிவாக உறுதியாக எப்பொழுது ஆண்டார்கள் என்பதை அறிய மேலும் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவேண்டும். ஆயினும் அகநானூற்றில் குறிப்பிடப்பட்ட 'பவத்திரி என்ற சிறந்த கடற்கரைப் பட்டினத்தைச் சங்க காலத்தில் ஆண்டவர் தமிழ் மன்னரான தொண்டையர் மரபினரே என்பதில் ஐயமில்லை.

———

குறிப்பு: சங்க இலக்கியம் அகநானூற்றுப் பாடற்கண் இந்தக் கட்டுரைக்கு அரண்செய்யக்கூடிய வரலாற்றுச் சான்று கிடைத்திருப்பதைக் கட்டுரை ஆசிரியர் விளக்கியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

—ஆசிரியர்

ஆற்றுப்படையும் ஆறுபடை வீடும்

[கழகப் புலவர் இறைக்குருவனர்]

பழந்தமிழ் இலக்கியங்களுள் திருக்குறளை யடுத்துத் திருப்பெற்று நிற்கும் சிறப்புற்று விளங்குவது திருமுருகாற்றுப்படை என்னும் தனிநெடும் பாட்டேயாம். திரு என்னும் அடைமொழி ஆற்றுப்படைக்குப் பொருந்துவதினும், பாட்டுடைத் தலைவனை முருகற்கே பெரிதும் பொருந்துவதாயினும் திருநின்ற செம்மை வாய்ந்தது இம் முருகாற்றுப்படை என்பதில் ஐயமில்லை.

பாட்டினும் தொகையினும் அமைந்து விளங்கும் ஏனையவற்றை நோக்கத் 'திருமுருகாற்றுப்படை' காலத்தால் பிந்தியதென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. ஆயினும் அக்காலத்துப் பாடல்களைத் திரட்டித் தொகைவகையாக முறைப்படுத்தி யமைத்தோர் இறைமணங் கமழுஞ் சிறப்பு நோக்கி இதனைப் பத்துப்பாட்டுள் முதற்பாட்டாகப் பாங்குற அமைத்துள்ளனர். ஆதலின் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் முத்திற நூல்கள் முப்பத்தாறனுள்ளும் முடிமணியாய் இலங்கும் இத்திருமுருகாற்றுப்படை சிவநெறி மெய்ப்பொருள்கள் முப்பத்தாறனுள் முதன்மையதாகிய சிவமே போலச் சீருறத் திகழ்கின்றதென்பர்.[1]

செந்நெறி நூல்களைப் பன்னிரு திருமுறையாகப் பாகுபடுத்தி வாகுற அமைத்த பிற்றைக்காலப் பெருமக்களும் இத் திருமுருகாற்றுப்படையைப் பதினோராந் திருமுறையில் பாங்குறப் பொதிந்து வைத்துள்ளனர். இவ் வருள்நூல் பன்னெடுங் காலமாகப் பயனுறு வழிபாட்டு நூலாகக்கொண்டு நாளும் ஓதப்படும் மாட்சிமையுடையதாக விளங்கி வருகின்றது. இன்று நம் கைக்குக் கிட்டியுள்ள சமய-வழிபாட்டு நூல்களுள் நனிமிகு பழமைவாய்ந் திலங்குவது இத் தனிநெடும் பாட்டேயாம்.

ஆறு என்னுஞ் சொல் வழி என்றும், படை என்னுஞ் சொல் படுத்துதல் - செலுத்துதல் என்றும் பொருள் தருதலால் ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துதல் வழியிற் செலுத்துதல் (வழிகாட்டி, அவ் வழியிற் செல்லச்செய்வது) என்று பொருள்படும்.

வள்ளியோர்பால் வரிசைபெற்று மீண்டுவருங் கலைவாணர்கள், தம்போலும் கலைவாணர்கள் வாட்டமிக்கு வறியநிலையினராய் வரு

தலைவழியெதிர்க் காணின், தமக்கு வரிசையறிந்து பரிசளித்த வள்ளி யோரின் பீடும் பெயரும் பிறவுங்கூறி அவர்கள்பால் சென்று பயன் கொள்ளுமாறு ஆற்றுப்படுத்துதல் இயல்பு. இதனைக்

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி
பெற்ற பெருவளன் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்''[2]

என்னுந் தொல்காப்பிய நூற்பாப் பகுதியால் அறியலாம். இந் நிகழ்ச்சியில் தலைமகன் ஒருவன் பாவாணரால் பாடப்பெறும் சிறப்பு நோக்கி இப்பகுதி பாடாண்டிணையின் துறைகளுள் ஒன்றாக வகுக்கப் பட்டுள்ளது. புறநானூற்றுப் பாடல்கட்குத் துறைவகுத்த பிற்காலப் பெரியோர் அவற்றுள் சில பாடல்களை ஆற்றுப்படை என்னும் துறையினவாகக் குறித்துள்ளனர். பதிற்றுப் பத்துள்ளும் ஆற்றுப் படை அமைந்துள்ளது.

ஆசிரியர் தொல்காப்பியர் மேற்கூறிய பாடாண்டிணைப் பகுதியுள் ஆற்றுப்படை என்னும் பெயரைக் குறித்தாரல்லர். ஆயினும்,

''முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்''[3]

என்னும் சொல்லதிகார நூற்பாவில் அறிமுகப்படுத்தியுள்ளார். ஆதலின் ஆற்றுப்படை தொல்காப்பியக் காலத்திற்கு முன்னமேயே வழக்காற்றிலிருந்தமை பெறப்படும். இஃதறியாதார் ஆற்றுப்படை என்னும் பெயர் தொல்காப்பியர் காலத்து இல்லையென்றும், பத்துப் பாட்டுள் அமைந்துள்ள ஆற்றுப்படை ஐந்தனுள்ளும் காலத்தான் முந்தியதாகக் கருதப்படும் பொருநராற்றுப்படையை யாத்த முடத் தாமக்கண்ணியாரே இப் பெயரை உருவாக்கினர் எனக் கொள்ள லாம் என்றும் தமக்குத் தோன்றியவாறே கூறுப.[4]

ஆற்றுப்படை பாடாண் திணையின் துறைகளுள் ஒன்றாகச் சாற்றப்பட்டமையின் புலவர்கள் இதனையொரு வாயிலாகக் கொண்டு நருதிவாய்ந்த தலைமக்களின் சீர் நலங்களைப் புனைந்துரைப்பா ராயினர். பத்துப்பாட்டுள் செம்பாகமாக அமைந்துள்ள திருமுரு காற்றுப்படையுள்ளிட்ட ஐம்பெரும்பாடல்களும் இங்ஙனம் படைத்து மொழி கிளவியாய்ப் புனையப்பட்ட ஆற்றுப்படைகளேயாம்.

திருமுருகாற்றுப்படை, திருவருள் பெற்ற பெருமகனுர் ஒருவர் பேரின்பம் அவாவிய தக்கோன் ஒருவனே அது பெறுமாறு முருகப் பெருமானிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. ஆகவே, 'கூத்தர் முதலாய நாற்பாலரும் பெருவளம் பெற்று வருகிற ஞான்று, வறிய நிலையில் வழியெதிர்ப்பட்ட தம்மனோர்க்குத் தாம் பெற்ற பெருவளங்கூறி, அவர்தம்மை ஆற்றுப்படுத்தும் பகுதி'[5] என்னுந் தொல்காப்பிய இலக்கணத்திற்கும், அதனை யொட்டி யெழுந்த இலக்கியங்கட்கும் ஓராற்ருன் வேறுபாடுடையதாய் விளங்குகின்றது. ஆயினும் சென்று பயனெதிர ஆற்றுப் படுத்து தற்குரியார் கூத்தர் முதலாய நாற்பாலரே யன்றி வேறியாருமிலர் என்று தொல்காப்பியர் வரையறுத்து ஓதாமையானும், பெற்ற பெரு வளம் பெருர்க்கு அறிவுறுத்தலே அந் நூற்பாப் பகுதியின் சிறப் புடைத்தாகலானும் பேரின்ப வீட்டினுஞ் சிறந்த பெருவளம் பிறிதின்மையானும், புதிது புனையப்பட்ட இத் திருமுருகாற்றுப் படை முன்னை நூல் வழக்கொடும் மேற்கூறியாங்குச் சற்றே வேறு பாடுடையதாயினும் மற்று மாறுபாடுடையதன்று என்பது நன்கு தெளியப்படும்.

பொருநராற்றுப்படை முதலிய ஏனை ஆற்றுப் படைகளெல்லாம் ஆற்றுப்படுத்தப்படுவோர் பெயரை அடைமொழியாகக் கொண் டிருக்க, இத் திருமுருகாற்றுப் படையோ ஆற்றுப் படுத்துதற்கிடனு யமைந்த வள்ளியோன் பெயரையே அடையாகக் கொண்டு பெயர் பெற்று வழங்கப்பட்டு வருகின்றது. ஏனைய ஆற்றுப்படைகளில் ஆற்றுப்படுத்தப் பெறுவோர் குறிப்பிட்ட சிலரேயாகலானும், அவர் பெறும் பெருவளன் அழியும் இயல்பிற்றாகலானும், வள்ளியோர் எத்துணை மேம்பட்ட புகழுடையராயினும் அவர்தாமும் சில்வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவினரே யாகலானும், மற்று இத் திருமுரு காற்றுப்படையோ அன்றும் இன்றும் என்றுந் தன்னை ஓதுவாரை யெல்லாம் மெய்ந்நெறிப்படுத்தும் மேன்மையுடைய தாகலானும், இறுதியில் இன்பத்து உறுதிப் பொருளாய வீடுபேற்றினைப் பெறுவிக்கும் வியன் சிறப்புடையதாகலானும், பெருவள்ளலாகிய முருகப்பெருமானையே பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட பான்மையதாகலானும் ஏனையவை போலாது வள்ளியோன் பெயரையே ஆற்றுப்படுத்தற் கிடனுயமைந்த அடையாகக் கொண்டு பெயர் வழங்கப் பெறுவது சாலச் சிறந்ததேயாம்.

இனி, முருகப்பெருமான்பால் அடியாரை ஆற்றுப்படுத்துவது என்னுது முருகப்பெருமானை அடியார்பால் ஆற்றுப்படுத்துவது எனக் கொள்ளல் வேண்டும் என்பாருமுளர்.

திருமுருகாற்றுப்படைக்குத் துறை வகுக்கப் புகுந்தோர் இதனை ஆற்றுப்படையெனப் பொதுப்படக் கூறுவதன்றிப் பொருநராற்றுப்படை, பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, விறலியாற்றுப்படை என ஏனையவற்றுக்கு விளக்கமுறத் துறை வகுத்தாங்கு இதற்கும் வகுக்குமாறு வெளிப்படப் புலப்படாமையின் ஒருவாறு உய்த்துணர்ந்து 'புலவராற்றுப்படை' யென வழங்கியுள்ளனர்.

வீடு பெறுதற்குரிய தகுதியுடையோர் மெய்யறிவு வாய்ந்த மேலோரே யாகலின், ஈண்டு ஆற்றுப்படுத்தற்பாலார் அவரே யெனக்கொண்டு இதற்குப் புலவராற்றுப்படை எனத் துறைவகுத்து வழங்கியுள்ளமை பெரிதும் பொருந்துவதேயாம்.

> "எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்"

என்றநூலுங் காண்க!

இனி, புறநானூற்றுப் பாடல்கள் சில புலவராற்றுப்படை யெனத் துறைவகுக்கப்பட்டுள்ளனவா லெனின், அவை அத் துறைப்படுத்தற் பாலனவல்ல வென்பதனைத் திரு. ச. பன்னீர்ச் செல்வம் அவர்கள் நன்கெடுத்து விளக்கியுள்ளமையின்[6] கண்டு தெளிக! அன்றியும் ஐயனாரிதனார் முதலியோரான பிற்கால இலக்கண நூலார்க்கும் அஃது உடம்பாடில்லை யென்பது புலவராற்றுப்படைக்கு அவர் வகுத்துக் காட்டும் இலக்கண இலக்கியங்களான்[7] அறியப்படும்.

புலவராற்றுப்படை யென்பதே திருமுருகாற்றுப் படைக்குச் சிறப்புப் பெயராக வழங்கப்பட்டது போலும். நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியவுரையில்,

> "இதனைப் புலவராற்றுப் படையென உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப் பெயர் வழங்காமையான் மறுக்க"[8]

என்று மறுத்துரைக்கின்றார். அவர் திருமுருகாற்றுப்படை என்னும் பெயரை மறுத்துப் புலவராற்றுப்படை யென்பதனையே அதற்குச் சிறப்புப் பெயராய்க் கொண்டுரைத்தாரை மறுத்ததன்றிப் புலவ

ராற்றுப்படை என்னும் துறைவகுப்புச் செல்லாதெனக் கரணியங் காட்டி மறுத்தாரல்லர். ஆதலின் ஓராற்றான் அவர்க்கும் அஃது உடன்பாடேயாம்.

முன்னை வழக்கின் வேறுபட்டுப் புலவராற்றுப்படை யென்னுந் துறை திருமுருகாற்றுப்படைக்குப் புதிது வகுக்கப்பட்டமையின் 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பல்' என்னும் நூன் முறைப்படி பிற்காலத்தே இலக்கண நூல் வகுக்கப்புகுந்த புறப் பொருள் வெண்பா மாலை, பன்னிருபாட்டியல் முதலிய நூலா சிரியர்கள் புலவராற்றுப்படை யென்னும் துறையைச் சேர்த்துக் கொண்டதூஉ மன்றி, அதன் தனித்தன்மை விளங்க அதனை ஏனை ஆற்றுப்படையொடு ஒட்டியுரையாது வேறுபடுத்துரைத் துள்ளமையோடு இலக்கியமுஞ் செய்துகாட்டுவாராயினர். புலவ ராற்றுப்படைக்கு அவர்காட்டும் இலக்கண இலக்கியங்களை நுணித்து நோக்கின், அவை திருமுருகாற்றுப்படையை அடிப் படையாகக் கொண்டெழுந்து வழக்கூன்றியனவேயாம் என்பது தெள்ளிதிற் புலனும்.

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் பன்னெடுங்காலம் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் கிடந்தன. பண்டாரகர் உ. வே. சா. அவர்களின் காலத்திற்கு முற்பட்ட பெரும்புலவர்களுக்குங்கூடப் பெரும்பாலும் கழக இலக்கியப் பயிற்சியில்லை என்பது நோக்கற்பாற்று. மற்றையனவெல்லாம் பயிற்சி குன்றிக்கிடந்த காலத்தும் இத் திருமுருகாற்றுப்படை யொன்று மட்டும் சமய-வழி பாட்டு நூலாகப் பற்பலராலும் அன்றாடம் ஓதப்பட்டு வந்தது. இச் சிறப்பு நோக்கியே மேற்காட்டியாங்கு இது பதினோராந் திரு முறையுள்ளும் கோக்கப் பெற்றது. திருமுருகாற்றுப்படை பலருக்குந் தெரிந்த தொன்ருக இருந்தது. ஆற்றுப்படை என்ற அளவிலேயே அது திருமுருகாற்றுப்படையையே குறிப்பதாகவும் அமைந்திருந்தது எனலாம்.

எனவே திருமுருகாற்றுப்படையுள் குறிப்பிடப்பட்ட முருகன் திருப்பதிகளை ஆற்றுப்படை வீடு என்று குறித்தனர் போலும். பாசறையைக் குறிக்கும் படைவீடு என்னுஞ்சொல் முன்னரே வழக்காற்றில் இருந்தமையாலும், முருகன் படைத்தலைவன் (சேனபதி) எனப் பெற்றமையாலும் ஆற்றுப்படை என்பதனை யொட்டி ஆற்றுப்படைவீடு என்று நீட்டவாய்ப்பேற்பட்டது. முருகன் ஆறுமுகன் எனப் பெற்றமையாலும், அவனுக்குரிய திருமந்திரம் ஆறெழுத்து எனப்பட்டமையாலும், முருகனை வளர்த்தோர் ஆரல் (கார்த்திகை)மகளிர் அறுவர் எனப்பெற்றமையாலும், ஆறு என்னும்

எண்ணுப்பெயர் முருகனொடு பல்லாற்றானும் தொடர்பு படுத்தப்பட்டமையின் ஆற்றுப்படை என்பதிலுள்ள ஆறு என்னும் இடப்பெயர் ஆறு என்னும் எண்ணுப் பெயராகக் கொள்ளப்பட்டது. படவே முருகன் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கின்றான் என்றும், அவ் வாறுமே அவற்கு உகந்த திருப்பதிகளாமென்றும் பொது மக்கள் கருதுவாராயினர். இப்போது ஏழாவது படைவீடொன்றும் முளைத்துள்ளது.

ஆறுபடைவீடு எனப்படுவன திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படும் இடங்களேயாம். அவைதாமும் நக்கீரர் வகுத்துரைத்த வரிசை முறைப்படியே திருப்பரங்குன்றம் முதலியனவாக இன்றுகாறும் வழங்கப்பட்டு வருகின்றமையும் இவ்வுண்மையை உறுதிப்படுத்தும்.

திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படும் முருகன் திருப்பதிகள்தாமும் ஆறு அல்ல. ஆசிரியர் நக்கீரர் பெருமான் ஆற்றுப்படை யமைப்புக்கேற்பப் பேரின்ப வேட்கையாளனை, அது வழங்கும் முருகப்பெருமான்பால் ஆற்றுப்படுத்துகின்றார். அவன்றன் உறைவிடங்களாக ஆசிரியர் சுட்டிக் கூறுவன சிறப்பாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம், என்னும் நான்கும் பொதுவாக எண்ணற்ற மலைப்பதிகளும், மற்றும் சாலை, சதுக்கம் வெறியாடுகளம் முதலியன பலவுமாம்.

பாட்டின் இறுதிப்பகுதியில் பழமுதிர் சோலையை ஆசிரியர் பலபடப் புனைந்துரைக்கின்றார். அது முருகன் திருப்பதி என்பதில் ஐயமில்லை. ஆயினும் ஆசிரியர் அதனைத் திருப்பரங்குன்றம் முதலிய நான்கனையுங் கூறியாங்குச் சுட்டிக் கூறினாரல்லர். "நல்குமதி" என்னும் பாட்டின் பயனிலைக்குப் "பழமுதிர்சோலை மலைகிழவோன்" என்பதனை எழுவாயாய் நிறுத்தி அதனைப் புனைந்துரைக்கின்றனரே யன்றி வேறில்லை. சிறப்பும் பொதுவுமாகப் பல திருப்பதிகளைக் கூறிச்செல்லும் ஆசிரியர் பழமுதிர்சோலை என்னும் தனிப்பகுதியை இறுதியிற் கூறியது இதுபற்றியேயாம். சிலர் பழமுதிர்சோலை ஒரு தனித் திருப்பதி யன்றெனவும், குன்றுதோறாடல் என்றாற்போலப் பற்பல சோலைகளும் பொதுப்படக் கூறப்படுகின்றன எனவுங் கூறுப.

இனி, முருகப்பெருமான் திருவிளையாடல்களைப் பலபடப் புனைந்துரைக்கும் கந்தபுராணம் உள்ளிட்ட எந்த நூலிலும் அவன் ஆறு இடங்களில் படைவீடு கொண்டதாகக் கூறப்படவில்லை. மற்றுத் திருச்செந்தூர் ஒன்றுமட்டுமே படைவீடாகக் குறிக்கப்படுகின்றது

ஆறுபடை வீடு என்று இக் காலத்துச் சிலர் வழங்கிவரினும் அடிப்பட்ட சான்ரேர் யாரும் இங்ஙனம் வழங்கக் காண்கிலம். குமர குருபர அடிகளார்

"உள்ளமுவந்(து)
ஆறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!"[9]

என்றுரைக்கின்ருர். இதன்கண்ணுள்ள ஆறு திருப்பதி என்பதற்கு ஆறுபடைவீடு என்று உரைகூறுகின்றனர். அது பொருந்தாது. ஆறு ஆதாரங்களே அங்ஙனம் கூறினுரெனக் கொள்ளலே சாலப்பொருந்தும்.

நாவலர் ந. மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தாம் வரைந்துள்ள 'நக்கீரர்' என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்:

"திருப்பரங்குன்றம் முதலியவற்றை முருகக்கடவுளின் படைவீடுகள் என வழங்கி வருகின்றனர். இவ் வழக்கு எக் காலத்து உளதாயதென்று தெரிந்திலது. முருகக்கடவுள் சேனுதிபதி யாகலின் அவருறையுமிடங்களேப் படைவீடு என வழங்கினர் போலும்"[10]

செந்தமிழ்ச் செல்வர் கி வா. சகநாதன் அவர்கள்

"முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கிருன் என்ற வழக்கு பலகாலமாகத் தமிழ்நாட்டில் இருக்கிறது. அந்த வழக்குக்கு அடிப்படை திருமுருகாற்றுப் படையே. நக்கீரர் ஆறுபடை வீடுகள் என்று குறிப்பிட்டுச் சொல்லா விட்டாலும் ஆறு இடங்களேத் தனித்தனியே வைத்துச் சுட்டிக் காட்டுவதால் ஆறுபடை வீடுகள் என்ற அமைப்பு உண்டாயிற்று. வேறுபல இடங்களிலும் முருகன் இருந்தாலும் ஆறு என்ற எண்ணிக்கைக்கும் அவனுக்கும் தொடர்பு மிகுதி. ஆகையால் ஆறுபடை வீடு என்ற வழக்கு நிலேயாக நின்றுவிட்டது"[11]

என்று கூறுகின்ருர். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் ஆறு இடங்களேக் கூறவில்லே என்பதை மேலே விளக்கிக் காட்டினேமாகலின் அவர் கூற்றுப் பொருந்தாமையறிக!

திருமுருகாற்றுப்படை ஏனே யாற்றுப்படை நூல்களினும் பல்லாற்ருனும் வேறுபட்ட தனிச் சிறப்புடைய தென்பதும்,

பன்னெடுங் காலமாகத் தொடர்ந்து பயிலப்பட்டுவரும் மாட்சியுடைய தென்பதும், புலவராற்றுப்படை என்னும் துறை வகுப்பு அதற்கும் பொருந்துவதேயா மென்பதும், இவ்வாற்றுப் படையை யொட்டியே ஆறுபடை வீடுகள் என்னும் போலி வழக்குத் தோன்றி நிலவி வருகின்றதென்பதும், அது பொருந்தாதென்பதும், பிறவும் அறிந்துணர்ந்து கடைப்பிடிக்க!

குறிப்பு

1. திருமுருகாற்றுப்படை விளக்கம். (கி. வா. ச.) பக் : 11.
2. தொல் - பொருள் - புறத்திணை : 36.
3. ,, - சொல் - எச்ச : 66.
4. தமிழ்ப்பொழில் - துணர் 51-மலர் 5, 6 - பக் : 151.
5. தொல் - பொருள் - புறத்திணை : 36
6. தமிழ்ப்பொழில் - துணர் - 51 - மலர் 5, 6 - பக் : 146.
7. புறப்பொருள் - பாடாண் : 42; இலக்கண விளக் : 617.
8. தொல்–பொருள் - புறத்திணை : 33.
9. கந்தர் கலிவெண்பா : 217 – 218.
10. தமிழ்ப்பொழில் - துணர் 51 - மலர் 7, 8, 9 - பக் : 220.
11. திருமுருகாற்றுப்படை விளக்கம் - பக் : 104,

முருகப்பெருமான் தோற்றம்

விடியற் காலையிற் கீழ்பாற் றோன்றும் ஞாயிற்றின் எதிரே கீழ்நிற்கும் பசுங்கடலானது ஒரு மயிலினுருவத்தை ஒத்திருத்தலும், அதன்மேற் றோன்றுஞ் சிவந்த இளவள ஞாயிறு அம் மயின் மேல் அமர்ந்திருக்கும் ஒரு தெய்வ இளைஞனை ஒத்திருத்தலுங் கண்டன்றே ஆசிரியர் நக்கீரனார் தாம் அருளிச்செய்த திருமுருகாற்றுப் படை முதலில் முருகப்பிரான் மயின்மேல் அமர்ந்திருக்குந் தோற்றத்திற்குக் காலை ஞாயிறு கடன்மேற் றோன்றுங் காட்சியினையே உவமையாக எடுத்து,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

என்று ஓதுவாராயினர்?

—மறைமலையடிகளார்

[கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா - பக் : 107]

தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

18. புரி (வளை)

உல்—உல. உலத்தல்=வளைதல், உருள்தல், திரள்தல். உல—உலம்=உருட்சி, திரட்சி.

உலக்கை=உருண்டு திரண்டு நீண்ட குத்துக்கருவி அல்லது ஆட்டுககருவி.

உல—உலவ. உலவுதல்=வளைதல், திரிதல், சுற்றுதல் உலவ—உலாவு. உல—உலா—உலாத்து.

உலவு—உலகு=சுற்றும் கோள். உலகு—உலகம்=பேருலகு. 'அம்' பெருமைப் பொருட்பின்னொட்டு. உலகம்—வ. லோக—இந். லோக்.

உலவு—உரவு. உரவுதல்=உலாவுதல். உலாவு—உராவு.

உல்—உர்—உருள்—உருளி, உருளை, உருண்டை—உண்டை. உருளை—உருடை—ரோடை—ரோதை—L. rota.

உல்—புல்—புரி—புரள்—புரளி, புரண்டை — பிரண்டை புரள்—புரட்டு—புரட்டல், புரட்டி, புரள்—பிறழ்.

புர்—புரி. புரு —புருள்—புருளை—புருடை—பிருடை.

புர்—புரு—புருவு—புருவம்=கண்மீ வளைவு.

வ. ப்ருவ (bhruva), ON. brun, OE. *brū*, E. *brow*.

புரிதல்=வளைதல், சூழ்தல், திரும்புதல், முறுகுதல்.

புரி=முறுக்கு, முறுக்கிய இழை, முறுக்கிய கயிறு, சுருள், சுரி, உள்திருகிய சங்கு, நகரைச் சூழ்ந்த மதில், மதில் சூழ்ந்த கோட்டை, கோட்டையுள்ள அல்லது மதில் சூழ்ந்த நகர் அல்லது நகரம். எ-டு: மதுராபுரி, மயிலா புரி.

இடம்புரி = வலமிருந்து இடமாக உள்வளைந்த சங்கு. கொடும்புரி = அறும் நிலையிலுள்ள கம்பியின் அல்லது முடிச்சுப்படும் நிலையிலுள்ள கயிற்றின் கொடு முறுக்கு.

முப்புரி = மூன்று முறுக்கிழை.

வலம்புரி = இடமிருந்து வலமாக உள்வளைவுள்ள சங்கு.

வைக்கோற்புரி = முறுக்கிய வைக்கோற் பழுதை. புரிகுழல் (புரிக்குழல) = கடை குழன்று சுருண்ட கூந்தல்.

புரிக்கூடு = வைக்கோற் புரியாற் கட்டிய நெற்கூடு.

புரிகட்டியிழுத்தல் = தண்டனையாகக் காலில் வைக்கோற்புரி கட்டித் தெருத் தெருவா யிழுத்தல்.

புரிசடை = திரண்டு சுருண்ட சடை.

புரி திரித்தல் = புரி முறுக்குதல்.

புரி தெறித்தல் = கயிறு அறுகை.

புரிநூல் = மார்பிலணியும் முப்புரி நூல்.

புரி பாய்ச்சுதல் = சிறு கயிற்றை முறுக்க ஒழுங்குபடுத்துதல்.

புரியணை = மண்பாண்டம் வைக்கும் வைக்கோற் புரியணை.

புரிமுகம் = நகர் முகப்பிலுள்ள கோபுரம்.

புரிமுகம் = சங்கு (வலம்புரி அல்லது இடம்புரி).

புரிமுறுக்கு = இழை முறுக்கு, மலராப் பேரரும்பு நிலை.

புரி வலித்தல் = கட்டுதல்.

புரிவளை = முறுக்கு வளையல்.

புரிவிடுதல் = கயிறு திரிக்கப் புரியை முறுக்குதல்.

புரி—புரிசை = நகரைச் சூழ்ந்த மதில்.

புரி—பரி. பரிதல் = முறிதல், அறுதல், பிரிதல், அழிதல், இரங்குதல்.

பரித்தல் = சூழ்தல். "குருதி பரிப்ப" (அகநா. 31)

புரி—பரி—பரிசு = வட்டக்கூடை யோடம் (coracle).

பரிசு—பரிசல் = கூடையோடம்.

பரி—பரிசை = வட்டக்கேடகம்.

பரி—பரிதி = 1. வட்ட வடிவம். 2. கதிரவனை அல்லது நிலாவைச் சூழ்ந்திருக்கும் கோட்டை (பரிவேடம்). 3. தேருருளை. 4. சக்கரப்படை. 5. சக்கரவாகப்புள். 6. வட்டமான கதிரவன். 7. கதிரொளி. 8. ஒளி. பரிதி—பருதி.

ஆரிய வேள்வித் தீயைச் சுற்றிவைக்கப்படும் தருப்பைப் புல்லும், வடிவம் பற்றிப் பிற்காலத்திற் பரிதியெனப் பட்டது.

பரிபுரம் = பெண்டிர் கணுக்காலைச் சுற்றியுள்ள சிலம்பணி.

பரியாள்—பரியாளம் = அரசனைச் சூழ்ந்து வரும் பரிவாரம். "பரியாள மடைந்ததே" (சீவக. 949).

பரியாளன் = பரிவாரத்தைச் சேர்ந்தவன்.

பரிவட்டம் = 1. நிலாக்கோட்டை (ஊர்கோள்). 2. தொழ வரும் பெருமக்கட்குக் கோயில் மதிப்புறவாக (மரியாதையாக)த் தலையைச் சுற்றிக் கட்டும் தெய்வ ஆடை. 3. அதிகாரப் பதவிக்கு அடையாளமாக அரசன் அளிக்கும் நிலைக்குப்பாயம்.

பரிவட்டணை = யாழிசை யெழூஉம் எண்வகையுள் ஒன்று.

"பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல்
....
எண்வகையால் இசையெழீஇ"　　(சிலப். 7 : 5 - 8.)

வடமொழியில் வழங்கும் தமிழ்த்திரி சொற்கள்

புரி—*pur*, wall, rampart, fortress, city, town, RV.

புரி—*puri*, a town.

தமிழிற் புரம் என்பது கோபுரமுள்ள நகரையும், புரி என்பது கோட்டையுள்ள நகரையும், குறிக்கும். ஆயின், வடமொழியில் இவ் வேறுபாடின்மையால், புர, புரய என்னும் சொற்களும் கோட்டை அல்லது நகர் என்னும் பொதுப்பொருளே தரும்.

புரி என்பதன் திரிபான பரி என்னும் சொல், தமிழிற்போன்றே வடமொழியிலும் வட்டம் என்னும் அடிப்பொருளையும் முழுமை

மிருதி முதலிய வழிப் பொருள்களையும் உணர்த்தி, நூற்றுக் கணக்கான சொற்களின் முன்னொட்டாக வழங்கி வருகின்றது. எ - டு:

பரி, பரீ—*pari*, *parī*, ind. round, around, about, round about, fully, abundantly, richly.

pariṉsa (பரிம்ச), the best part of, RV.

parikāsana, frequent coughing.

paritkup, to be very angry.

paricar, to move or walk about, go round.

paricāra, *paricāraka*, an assistant, attendant, or servant.

parijana, surrounding company of people, entourage.

parinī, to lead about or round, RV., to lead a bride and bridegroom around a sacrificial fire, to marry.

pariṇaya, marriage.

paridā, to give, grant, bestow, surrender, RV.

paridāna, giving oneself up to the favour or protection of another.

paripri (பரிப்ரு), to fill (v. t.), to become completely full (v. i.). *paripūraṇa*, the act of filling, perfecting, rendering complete.

paribhās, to speak to, address. *paribhāsā*, speech, discourse.

paripac, to bring to maturity; Pass. to be cooked. *paripakva*, completely cooked or dressed.

parinirvā, to be completely extinguished or emancipated. *parinirvāṇa*, complete extinction of individuality, entire cessation of rebirths.

parimā, to measure round or about, RV. *parimāṇa*, measure of any kind,

parivrit (பரிவ்ருத்), to turn round, revolve, move in a circle or to and ro, roll for wheel or wander about, circumambiate, RV.

parivarta, revolving, revolution.

parivartana, causing to turn round.

parisudh, to bewailed off, become cleane or purified perfectly. *parisuddha*, cleaned, purified perfectly.

parisad, to sit round, RV., surrounding, an assembly, meeting, group, circle.

வட்டக் கருத்தினின்று 'தொறும்' கருத்துத் தோன்றுவதற்கு, "ஆட்டை வட்டம் காசு ஒன்றுக்கு......பலிசை" என்னும் கல் வெட்டுக் கூற்று எடுத்துக்காட்டாம். "வ்ருக்ஷம் பரிஸிஞ்சதி" (parisincati) (=மரந்தொறும் நீர் ஊற்றுகின்ருன்) என்னும் வட மொழிச் சொற்ருெடர் இதையொத்திருத்தல் காண்க.

பரிபுரம் என்னும் சொல்லில் சூழ்தற் பொருளும், "பரிபுலம் பினர்" (சிலப். 10 : 226) என்னுந் தொடரில் மிகுதிப் பொருளும், பரிமாறுதல் என்னும் சொல்லில் திருப்பல் அல்லது மாற்றுதல் பொருளும் வரிசைப் பொருளும், தோன்றுதல் காண்க.

வட்டறவு என்னுஞ் சொல் அறுதி முடிவைக் குறிக்கும்.

மேலையாரியச் சொற்கள்

கிரேக்கமும் ஆங்கிலமும்

Gk. pref. *peri*, round, about.

perianth, floral envelope.

pericardium, membranous sac enclosing the heart.

pericarp, seed-vessel, wall of ripened ovary of plant.

perichondrium, membrane enveloping cartilages (except at joints).

periclinal (geol.), sloping in all directions from central point.

perigynous (of stamen), situated around pistil or ovary.

periosteum, membrane enveloping the bones,

peripteral (of temple), surrounded by single row of pillars.

perisperm, mass of albumen outside embryo-sac in some seeds.

peristome (bot.), fringe of small teeth around mouth of capsule in mosses, (zool). parts around mouth in various invertebrates.

perity phlitis, inflammation of some part around the caceum, e.g. appendicitis.

pericranium, membrane enveloping skull.

periapt, thing worn about the person as charm, amulet.

perigee, that point in planet's (esp. moon's) orbit at which it is nearest to earth.

perihelion, that point in planet's orbit at which it is nearest to sun.

perimeter, circumference, onthire of closed figure.

period, round of time marked by recurrence of astronomical coincidences. Gk. *peri*, round *hodos*, way.

periodical, magazine published at regular intervals, e.g. monthly.

peripatetic, a. & n. Aristotelian, so called from Aristotle's custom of walking about in Lyecum while teaching.

periphery, bounding line, esp. of round surface, external boundary or surface. Gk. *periphercia*, circumference, *peri* round, *phero*, bear.

periphrasis, roundabout way of speaking, roundabout phrase, circumlocution.

periscope, kinds of tube and mirror apparatus by which one in a trench or in a submarine can see things above the parapet or water respectively. *periscopic*, enabling one to see distinctly for some distance round axis of vision.

perispomenon (Gk. gram.) word with circumflex accent on last syllable.

peristaltic (physiol.), applied to the automatic muscular movement consisting of wave-like contractions ,in successive circles, by which contents of alimentary canal etc. are propelled along it.

peristyle, row of columns surrounding temple, court, cloister etc, space so surrounded.

peritoneum (anat.), double serous membrane lining cavity of abdomen.

திருந்திய வழக்கிலும் கொச்சை வழக்கிலும் அகர முதல் எகர முதலாகத் திரிவது இயல்பே.

எ - டு : பரு பெரு, அரங்கன்—ரங்கன்—ரெங்கன். இம் முறையில் பரி என்னும் தமிழ்ச்சொல் கிரேக்கத்தில் பெரி என்று திரிந்தது.

பரி என்னும் முன்னொட்டுப் பெற்ற சில சொற்களும் தமிழ்த் திரி சொற்களாயிருப்பது கவனிக்கத்தக்கது.

எ - டு : period = peri + hodos (பாதை).

periphery = peri + phero (பொறு.) பொறுத்தல், சுமத்தல்.

புரி என்னும் தூய தமிழ்ச்சொல்லின் தென்மையும் தொன்மையும் முன்மையும், உர(வு), குர(வு), சுரி, திரி, நெரி, முரி என்னும் பிற முதனிலையெழுத்துக்களைக் கொண்ட ஒருபோகடிகளாலும் உணரப்படும்.

———

நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நற்றமிழ்த் தொண்டு

[ஞா. தேவநேயன்]

பாரதியென்று பெயர் கொண்ட முத்தமிழ்ப் புலவருள், தமிழ்க் காப்புப்பற்றி முதன்மை பெற்றவர் பசுமலை நாவலர் ச. சோ. பாரதியார் ஆவர்.

எம்மொழிப் புலமைக்கும் இலக்கண அறிவு இன்றியமையாதது. அதிலும் தமிழ்ப் புலமைக்கு அது தனிப்பட வேண்டுவது.

சிலர் இலக்கணக் கல்வியின்றியே சிறந்த மேடைப் பேச்சாளராயிருக்கலாம். அது பற்றி அவர் புலவர் வரிசையில் வைத்தெண்ணப்படார்.

புலவரும் துறை பற்றிப் பலவகையர்; ஒவ்வொரு துறையிலும் தலையிடை கடையென முத்திறத்தர். ஒரு புலவரின் புலத்திறத்தை அவர் துறைப் புலமை மிக்காரே அளந்தறிதலொண்ணும்.

''புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்'' (பழமொழி, 7)

என்றார் முன்றுறையரையனார்.

நாவலர் பாரதியார் ஆங்கிலப் பொதுக் கல்வியில் முதுபட்டமும் சட்டக் கல்வியில் இளம் பட்டமும் பெற்றபின், தமிழிலக்கணவிலக்கியம் திறம்படக்கற்று, தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்னும் மூவியற்குப் புத்துரையும் வரைந்து வெளியிட்டார். அகத்திணையியல் உரைப் பாயிரத்தில்,

''தற்காலம் தமிழில் தலை சிறந்து நிலவுவது தொல்காப்பியர் நூலே. அது, ஆரியப் பாணினிக்கும் தூரிய மேல் புலயவன அரித்தாட்டிலுக்கும் காலத்தால் முந்திய தொன்மையுடையது. பாணினியின் செறிவும், பதஞ்சலியின் திட்பமும்,

அரித்தாட்டிலின் தெளிவும், அவையனைத்திலு மில்லா வளமும் வனப்பும் அளவை நூன்முறை யமைப்பும் பெற்றுச் செறிவும் தெளிவும் நெறியா நெகிழவும் நிரம்பியமைந்தது"

என்று கூறியிருப்பது நாவலரின் தமிழ்ப் புலமையையும் பற்றையும் ஒருங்கே காட்டும்.

1942 இலேயே அவர் இங்ஙனம் எழுதியிருந்தும், பர். தெ. பொ. மீ. 1974இல் வெளியிட்ட 'தமிழிலக்கணத்தில், அயன் மொழி அமைப்புகள்' (Foreign Models in Tamil grammar) என்னும் ஆங்கிலப் பொத்தகத்தில், தொல்காப்பியம், கி. மு. 6ஆம் நூற்றாண்டில் எழுந்த பாணினீயத்தைப் பின்பற்றிய தென்றும், கி. மு. 4ஆம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய தென்றும், துணிந்து தமிழைக் காட்டிக் கொடுத்திருக்கின்றார்.

அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணியாற்றியதும், திருவையாற்று அரசர் கல்லூரியில் பர். சுப்பிரமணிய சாத்திரியார் முதல்வராகவும் பேரா. புருடோத்தம நாயுடு தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்த காலத்தில், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அராவ அண்ணல் (ராவ் சாஹிப்) எசு (S) வையாபுரிப் பிள்ளையின்கீழ்த் துணை விரிவுரை யாளராகப் பணியாற்றிய நான்மொழிப் புலவர் வேங்கடராசலு ரெட்டியார், தம் பதவிச் செருக்காலும் தம் மேலவர் துணையாலும், தமிழ் வடமொழி வழியது என்பதைக் குறிப்பாகவும் மறைமுக மாகவும் காட்டுமாறு, குற்றியலுகரம் மெய்யீறேயென்று ப. க. கழக வெளியீடாக வெளியிட்டதை மறுத்து, குற்றியலுகரம் உயிரீறே யென்று நாட்டுதற் பொருட்டு, மேற்குறித்த கல்லூரித் தமிழ்ப் புலவர் வகுப்பு மாணவர் என்னை அழைத்திருந்தபோது, என் சொற்பொழிவிற்குத் தலைமை தாங்கத் தக்கவர் அவரே (நாவலர் பாரதியாரே) யென்று அவரை அதற்கு அமர்த்தியதும், அவர் இலக்கியப் புலமைக்கும் இலக்கணப் புலமைக்கும் தலைசிறந்த சான்றாம்.

இத்தகைய புலமையும் பற்றும் இருந்ததனால், தமிழுக்கு எவராலும் எவ்வகையிலும் எத்துணையும் ஊறு நேர்வதை இம்மியும் பொறாதவராய், கடுந்தொலைவும் நோக்குங் கூரிய கழுதக்கண் கொண்டு எத்துன்பத்தையும் எதிரதாக் காக்கும் விழிப்புடையவராய், இந்தி இந்தியப் பொது மொழியாவதை முந்தியே தடுக்குமாறு, அது பற்றிப் பேசி முடிபு கொள்ளும் வாரதாக் கூட்டத்தில் அதை வன்மையாய் எதிர்க்க வேண்டுமென்று பண்டகர் (Dr.) சுப்பராய

னுக்கு எழுதியும், இந்தி அரச கோபாலாச்சாரியாரால் தமிழ் நாட்டிற் புகுத்தப்பட்டபின், அல்லும் பகலும் அலைப்புண்டு, நாடு முழுதும் நகர்தோறும், தொடர்ந்து நிகழ்ந்த மாலைக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அரிமாபோல் உரறி இந்தியெதிர்த்தும், அரச கோபாலாச்சாரியார்க்கு ஆங்கிலத்தில் திறந்த திருமுகம் விடுத்தும், இயன்ற வரை முயன்று எதிர்கால முழுவெற்றிக்கு அரணான அடி கோலினர்.

இந்தி யெதிர்ப்புப் போராட்டத்தில் நாடு முழுதுங் கொந்தளித்தது; உண்மைத் தமிழர் அனைவரும் குல மத கட்சி வேறுபாடின்றி ஓரினமாய் ஒன்றினர். மறைமலையடிகள் எழுதிய 'இந்தி பொதுமொழியா?' என்னும் அரிய ஆராய்ச்சி எதிர்நூலும் வயிரவாளாக உதவியது.

இங்ஙனம், அறிவுத் துறையில் மறைமலையடிகட்கு அடுத்தபடியாகவும், போராட்டத் துறையில் ஈடிணையற்ற கருணாகரத் தொண்டைமான் போலும் படைத்தலைவராகவும், தமிழ்க்காப்புத் தொண்டாற்றி,

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்." (குறள். 429)

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது." (ஷ 647)

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி." (ஷ 1029)

முதலிய குறள்களை விளக்கும் வகையில் வாழ்ந்த நாவலர் பாரதியார், தமிழர் என்றும் மறவாது போற்றற்குரியார்.

ஆங்கிலக் கல்வியும், சட்ட நூலறிவும், ஏரண முறையில் எதிரியை வெல்லும் தருக்க ஆற்றலை வளர்க்கும் தன்னுரிமை வாழ்க்கைப் பணியான வழக்கறிஞர் தொழிலும், இயற்கையாகப் பெற்ற அஞ்சா நெஞ்சமும், இந்தியெதிர்ப்புப் போரில் அவருக்குப் பெரிதும் துணைசெய்தன.

அவர் போன்று, அவையடக்கும் அரிமாத் தோற்றமும், சுவைமடுக்கும் வினைநல மாற்றமும்; அழகிய வசிய முகமும், பழகிய வளமை யகமும்; கூரிய வங்கிமீசை முறுக்கும், ஆரிய வன்கட் கூற்று நறுக்கும்; விளங்குரை வெண்கலக் குரலும், விழுமிய பொருள் விளக்குந் திறலும்; காமஞ் செப்பாது கண்டது மொழியும் கட்டாண்மையும், ஏமமுஞ் சாமமும் இன்றமிழ் காக்கும் பற்றுண்மையும்; பரந்த நோக்கும், பாங்கான போக்கும்; ஒருங்கேயுடைய வழக்கறிஞரேனும் தமிழ்ப் பேராசிரியரேனும் பிறதொழிலாரேனும்

இன்று தமிழகத்திலும் இப்பாரில் வேறெப் பகுதியிலும் காண வியலுமோ?

நாவலர் பாரதியாரைப் பாராட்டுங் கூட்டத்திற்கு, பெரும் புலவரும் இந்தி யெதிர்ப்பவருமான ஒருவரே தலைமை தாங்கல் வேண்டும். அல்லாக்கால் முதலமைச்சரும், அவருமன்றேல் ஒரு வள்ளலாரும், தலைமை தாங்கலாம். முதலமைச்சர் தலைமை தாங்கின், கூட்டம் பெருக்கும்; கொண்டாட்டஞ் சிறக்கும்; கொள்ளும் முடிபுகள் நிறைவேற வழிவகை பிறக்கும். வள்ளலார் தலைமை தாங்கின், கொண்டாட்டச் செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்வார்.

பாராட்டுக் கூட்ட அறிவிப்பு நாடு முழுதும் தலைநகரிற் சிறந்தும் பரவுதல் வேண்டும். புலமையும் இந்தியெதிர்ப்பும் மிக்க புலவரை வரிசையறிந்து பேச்சாளராகக் குறித்த அச்சிட்ட நிகழ்ச்சி நிரலைத் தப்பாது கடைப்பிடித்தல் வேண்டும்.

பாராட்டு நாள் பொது விடுமுறை நாளாயிருத்தல் வேண்டும். பேச்சாளர் பதின்மரும் மேற்பட்டவருமாயின் பிற்பகல் நான்கு மணிக்கும், இருவர் மூவராயின் மாலை ஆறு மணிக்கும் தொடங்கி 8 மணிக்குள் முடித்துவிடல் வேண்டும்.

பாரதியார் படத்தொடு கூடிய வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை அச்சிட்டு, அவையோர்க்கு வழங்கலாம். ஆண்டு தொறும் பாராட்டுவிழா நிகழ்த்தலாம். விழாவைச் சிறப்பிக்கும் வேறு வழிவகைகளையும் கையாளலாம்.

வி-ம்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர் டாக்டர். வ. சுப. மாணிக்கம்

காரைக்குடி தமிழாராய்ச்சி வளர்ச்சி நிறுவனத்தின் நெறியாளரான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமர்த்தப்பெற்று 6—8—79இல் பொறுப்பேற்றமை யறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

புதுக்கோட்டை மாவட்டத்து மேலைச் சிவபுரியில் 17—4—1917 இல் பிறந்த திரு. மாணிக்கம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று புலவர் பட்டம் பெற்றார். அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு பி. ஓ. எல்., எம். ஏ. எம்., ஓ. எல். ஆகிய பட்டங்களும் பெற்றார்; சங்க இலக்கியத்தில் காதல்பற்றி ஆராய்ச்சி செய்து "டாக்டர்" பட்டம் பெற்றார்; காரைக்குடி அழகப்பர் கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், பின் அக் கல்லூரியின் முதல்வராகவும் விளங்கினார்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் திகழ்ந்தார்.



திரு. மாணிக்கம் அவர்கள் தமிழகப் புலவர் குழுவின் தலைவராகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறிவியல் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்—ஆங்கில அகரமுதலிக் குழுவின் உறுப்பினராகவும் விளங்கினார்; தமிழ்நாட்டரசின் எழுத்துச் சீர்திருத்த ஆய்வுக்குழு உறுப்பினராகவும் மற்றும் பல நிறுவனங்களிலும் பொறுப்பேற்றுள்ளார்.

"கெடலெங்கே தமிழின் நலம், அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க" என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் மொழிப்படி தமிழுக்கு ஊறு நேரின் உடனே தாம் முனைந்து நின்று செயலாற்றும் இயல்பினரான மாணிக்கம் அவர்கள் கழக நூலாசிரியர்களுள் ஒருவராவர். இவர்தம் 'டாக்டர்' பட்ட ஆராய்ச்சியான "Tamil concept of love" என்னும் ஆங்கில நூல் கழகவழி வெளிவந்துள்ளது. 30—4—1961இல் கழகம் நெல்லையில் நடத்திய கோவை நூல்கள் பற்றிய நான்காவது சிற்றிலக்கிய மாநாட்டிற்கு திரு. மாணிக்கம் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். கழகம் வெளியிட்டுள்ள மலர்களிலெல்லாம் இவர்தம் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அணிசெய்கின்றன. கழகப் பணிகளை மனம்விட்டுப் பாராட்டும் இயல்பினரான இவர் கழக ஆட்சியாளரிடத்துப் பற்றும் நன்மதிப்பும் கொண்ட பெருந்தகையாளராவர்.

நேர்மையும் நாணயமும் வாய்ந்த மாணிக்கம் அவர்கள் செட்டி நாட்டுப் பெருமக்களால் 'பொய்சொல்லா மாணிக்கம்' என்று போற்றப் படும் புகழுடையார்; நாட்டுக் கோட்டை நகரத்தார்கட்குள் ஒரு அருமணியாவர். இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த இப் பெருமகனார் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தரானதை மன மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம். வெல்க அவர்தம் பணிகள்! விளங்குக அவர்தம் புகழ்!!

செய்திகளும் குறிப்புக்களும்

நாவலர் பாரதியார் நூற்றாண்டு விழா

இருபதாம் நூற்றாண்டின் பெருமைசால் புலவர்பெருமக்களுள் ஒருவரான நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் புலமை நலமும் அதற்கேற்ற பெருமித உணர்வும் வாய்க்கப் பெற்றவராவர். மறைத்திரு மறைமலை யடிகளார்தம் மாணவர்களுள் இவரும் ஒருவராவர். அருந்தமிழ்ப் பணிகள் பற்பல புரிந்து புகழ்நிறுவிய இவர் 14—12—59இல் இறையடி நிழல் எய்தினர்.



கழகத்தின் சார்பில் 17-2-60இல் சென்னை இராசாசி மண்டபத்தில் அந் நாள் தமிழ்நாட்டு நிதியமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நாவலர் பாரதியார் நினைவுக் கூட்டம் நடைபெற்றது; "நாவலர் பாரதியார்" என்னும் வாழ்க்கை வரலாற்று நூலும் வெளி யிடப்பட்டது. செட்டிநாட்டரசர் அரசவயவர் முத்தையா செட்டியார் அவர்கள் நாவலர் பாரதியாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினர்.

இவ்வாண்டு நாவலர் பாரதியாரின் நூற்றாண்டு நிறைவு ஆண்டாகும். அவர்தம் அரும் பணிகள் சிறப்புறுக! நற்புகழ் நீடு வளர்க!

தமிழ்நாட்டு அரசின் சார்பில் நாவலர் பாரதியார் நூற்றாண்டு விழா

நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் நூற்றாண்டு விழா தமிழ்நாட்டரசின் சார்பில் 27—7—79 அன்று மாலை சென்னை இராசாசி மண்டபத்தில் மதுரை மாநகராட்சித் தலைவர் திரு. சு. முத்து அவர்கள்

தலைமையில் நடைபெற்றது. மொழிநூற் பேரறிஞர் பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வெள்ளைவாரணனார், டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் ஒளவை நடராசன் முதலியோர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

தமிழ்ப் பண்பாட்டு மன்றம்—நாவலர் பாரதியார் விழா

நாவலர் கணக்காயர் ச. சோ. பாரதியார் விழா தமிழ்ப் பண்பாட்டு மன்றத்தின் சார்பில் 27—7—79 அன்று மாலை சென்னை அண்ணாசாலை நடுவண் நூலகக் கருத்தரங்கில் நடைபெற்றது. திருவாளர்கள் சோ. இலக்குமிரதன் பாரதி, வித்துவான் மு. சண்முகம் பிள்ளை, 'தீபம்' நா. பார்த்தசாரதி ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

தமிழர் பேரவை 2ஆவது மாநில மாநாடு

தமிழ்நாட்டுத் தமிழர் பேரவையின் 2ஆவது மாநில மாநாடு 22—7—79 அன்று திருச்சிராப்பள்ளித் தேவர் மன்றத்தில் பேரவைத் தலைவர் தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. பேராசிரியர் எசு. எம். தயாசு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். முன்னாள் நடுவர் என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் மாநாட்டினைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களான நெ. து. சுந்தர வடிவேலு, முன்னாள் நடுவர் மகராசன், தொழிலதிபர் சி. கே. தேவராசு, டாக்டர் வ. சுப. மாணிக்கம், ஆர். கனகசபை பிள்ளை, பண்டிதர் முத்துக் கருப்பப் பிள்ளை, டி. பி. பாரதி முதலியோர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

உலகச் சைவத் தமிழ் மாநாடு

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் முதலாவது உலகச் சைவத் தமிழ் மாநாடு 20—7—79 அன்று திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் நின்றசீர் நெடுமாறன் கலையரங்கில் நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் டி. எசு. செல்வராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் பி. எம். முத்துவேல் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். திருவாளர்கள் இரா. சிவசேவு, வ. ச. நடராசபிள்ளை, மு. சு. சங்கர், தி. சு. ஆறுமுகம், பூந்துறை தியாகராசன், புலவர் ம. சிவசம்பு, பேரா க. பாலுசாமி, புலவர் கீரன் முதலியோர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் திருப் பெருந்திரு அம்பலவாண தேசிக அடிகளார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கம்பன் திருநாள்—நாமக்கல்

நாமக்கல் கம்பன் கழகத்தின் சார்பில் ஷெயூர் கமலாலயக் குளக்கரையில் அமைக்கப்பட்ட சடையப்பன் காவணத்தில் 14, 15—7—79 ஆகிய

இருநாள்களிலும் கம்பன் திருநாள் விழா சிறப்புற நடைபெற்றது. 14—7—79 காலையில் புதுவைத் திரு ந. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. திரு மு. இராமசாமி வரவேற்புரை நிகழ்த்தப் புதுவைத் திரு வேங்கட சுப்பா ரெட்டியார் விழாவைத் தொடங்கி வைத்தார். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்று மாலை கம்பனடிப் பொடி அவர்கள் தலைமையில் பேரவை நிகழ்ந்தது. 15—7—79 முற்பகல் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமையில் பாட்டரங்கமும், சோ. சத்திய சீலன் அவர்களை நடுவராகக் கொண்ட வழக்காடு மன்றமும், பிற்பகலில் திரு. இராதாகிருட்டிணன் அவர்கள் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றன. விழாவில் புகழ்மிக்க அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கம்பன் விழா—திருப்பத்தூர்

திருப்பத்தூர் கம்பன் கழகத்தின் சார்பில் 21, 22—7—79 ஆகிய இருநாள்களிலும் திரு. கம்பன் அடிப்பொடி அவர்கள் தலைமையில் கம்பன் விழா சிறப்பாக நடைபெற்றது. சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், கி. வா. சகந்நாதன், எம்பார் விசயராகவாசாரி, டாக்டர் ஔவை. நடராசன், பேரா. ஔவை. துரைசாமிப்பிள்ளை, புரிசை முருகேச முதலியார் முதலிய அறிஞர் பெருமக்கள் பலர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாட்டரங்கம், வழக்காடு மன்றம், இசையுரை, ஆய்வுமேடை, பட்டிமண்டபம், மலர்வெளியீடு, கண்காட்சி முதலிய பலவேறு நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன.

திருப்பத்தூர்—கோடியருச்சனைவிழா

திருப்பத்தூர் இராமகிருட்டிண மேனிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கக் கலையரங்கில் 23—7—79 முதல் 2—8—79 முடியப் பதினொரு நாள்கள் கோடியருச்சனைப் பெருவிழா நடைபெற்றது. பொள்ளாச்சி தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்கள் ஆதரவில் இவ் விழா திருவனந்தை தவத்திரு அபேதானந்த அடிகள் முன்னிலையிலும், தவத்திரு ஏகாத்மானந்த அடிகள் தலைமையிலும் நடைபெற்றது.

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு மதுரைமாநகரில் 1980 சனவரித் திங்கள் 2 ஆம் நாள் தொடங்கி ஒரு கிழமை தொடர்ந்து நடைபெறும். இம் மாநாட்டைத் தமிழ்நாட்டரசு முன்னின்று நடத்துகின்றது. கல்வித் துறையின் உயர்நிலைத் தனியதிகாரி ஒருவர் இம் மாட்டுத் தொடர்பான பணிகளைக் கவனிக்க அமர்த்தப்பெற்றுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 40 பேர்கள் அடங்கிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞானம் இந்திய நடுவணரசு அமைச்சர் சி. சுப்பிரமணியம், தமிழ்நாட்டரசு அமைச்சர்கள் கி. மனோகரன், ஆர். எம். வீரப்பன், சி. அரங்கநாயகம், மேனாள் முதலமைச்சர் எம். பக்தவச்சலம், அறமன்ற நடுவர்கள் :

எம். எம். இசுமாயில், பி. ஆர். கோகுல கிருட்டிணன், எசு. மகராசன், அரசவையர் டாக்டர் முத்தையாசெட்டியார், தி. ஆ. பெ. விசுவநாதம் முதலியோர் இக் குழுவின் துணைத் தலைவர்களாவர். திருச்சி நகராட்சி மன்ற ஆணையர் திரு. சி. சிவகுருநாதன் அவர்கள் இக் குழுவின் செயலாளராகப் பணியாற்றுவார்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் இதழ் ௫௫௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் இரா. மோகன் தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21.	25	00
உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை	10	00
உயர்திரு. ஆ. சுப்பையா பிள்ளை	5	00
திரு. அ. தி. சு. ஈசுவரன், சென்னை-1.	5	00
உயர்திரு. துரை குருக்கள், சென்னை-1.	100	00
பேரா. அ. கிருஷ்ணமூர்த்தி, தஞ்சை.	7	00

மதிப்புரை

தருதி

[ஆசிரியர் : ப. அருளி; கிடைக்குமிடம் : 2, மாணவர் இல்லம், 17. திருசப்ப (கிராமணியா)ர் தெரு, கிருட்டிணாம் பேட்டை, சென்னை-600005; விலை : உருவா 5-00.]

தருதி என்னும் சொல்லைப் பற்றிய விரிவும் விளக்கமும் வாய்ந்த ஆராய்ச்சியாக அமைந்துள்ளது இந்நூல். மொழி நூல் மூதறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் ஆராய்ச்சி முறைகளை அடியொற்றி வரையப் பட்டுள்ளது. பற்பல நூல்களினின்றும் மேற்கோள் காட்டி ஆசிரியர் தம் கருத்தை வலியுறுத்திச் செல்வது பாராட்டுக்குரியது. மொழி யாராய்ச்சியாளர்க்கு இது நல்விருந்து.

இலக்கியத் தகவு

[ஆசிரியர் : டாக்டர் மா. இராமலிங்கம், வெளியீடு : தாமரைப் பதிப்பகம், 66 குரப்பமுதலித் தெரு, சென்னை-600005; விலை : உருவா 5-00.]

'காவியத்தலைவன்' முதல் 'சுந்தர காண்டம் : நூற்புணர்ப்பு' ஈறாகப் பன்னிரு கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது இந் நூல். செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, குத்தூசி, உலகம் ஆகிய இதழ்களிலும் அவ்வைமன்ற ஆண்டு மலரிலும் இந்நூற் கட்டுரைகள் வெளிவந்தனவாகும். எழில் முதல்வன் என்னும் தமிழ்ப்பெயர்கொண்ட இந் நூலாசிரியர் ஆராய்ச்சி நோக்கில் பற்பல செய்திகளைத் தொகுத்துத் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

பெரிய புராணம் இலக்கியச் சொற்பொழிவு —வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர்	10	00
மொழிவழிச் சிந்தனைகள் —தவத்திரு குன்றக்குடி அடிகளார்	3	75
களத்திலே கடிதங்கள்—சாலை. இளந்திரையன்	4	00
திருமுறைத் தெளிவே சிவஞானபோதம் —வை. இரத்தினசபாபதி	15	00
கலைவாணர் பற்றித் தமிழறிஞர்கள் —பண்டித ரத்னு என். ஏ. வேலாயுதம்	5	75
பதிப்புக் கலை—அ. விநாயகமூர்த்தி	6	00
துங்கபத்திரை—தென்னரசு	6	50
நதியைத் தேடி வந்த கடல்—மகரிஷி	6	00
அறிவியல் படைத்த அற்புதங்கள்—உமாநாயகன்	4	00
சிந்தனைச் செல்வங்கள் —வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை	6	50
உலகைத் திருத்திய உத்தமர்கள்—சி. பி. சிற்றரசு	7	90
அவளுக்கென்று ஓர் இதயம்—அழகாபுரி. அழகப்பன்	6	90
நினைவுச்சரம்—வல்லிக் கண்ணன்	7	90
ஆராய்ச்சி முறையில் ஓர் அறிமுகம் —மு. பொன்னுசாமி, எம்.ஏ, எம்.பில்.	7	00
ஆதார சுருதி—ஏ. நடராஜன்	8	50
முதற் குரல்—கவிஞர் கு. மா. பா.	6	00
அறத்தின் குரல்—நா. பார்த்தசாரதி	21	00
மகளிர் ஒப்பனைக் கலை—வள்ளிநாயகி	5	50
இதிகாசக் கதைகள்—அ. லெ. நடராசன்	7	50
யாழிசை மன்னன்—எஸ். குலசேகரன்	8	50
தலைவன் ஒரு சிந்தனை —டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி	5	00
மனமும் பிரார்த்தனையும்— ,,	5	00
இறையருள் வேட்டல்—கலைமாமணி கவி கா. மு. ஷெரீப்	5	00
சிலம்புச் செல்வரும் புரட்சிக் கவிஞரும் —ப. கிருஷ்ணன், எம்.ஏ.,	7	00
கம்பரிடம் யான கற்ற அரசியல்—ம. பொ. சிவஞானம்	8	50
மனித உறுப்புக்கள—ஏ. எஸ் ரமண்யன்	8	25
இஸ்லாமிய இலக்கியம்—கா. அப்துல்காதர், எம்.ஏ.,	5	00
நாடகச் சிந்தனைகள்—அவ்வை சண்முகம்	4	00

கழகப் புதிய வெளியீடுகள்

மேனிலைப் பள்ளிகட்கேற்ற கருவி நூல்கள்
பொருளியல் (Economics)

ஆசிரியர்: மா. பா. குருசாமி. எம்.ஏ , எம்.லிட்., டி.ஜி டி.,
பொருளியல்துறைத் தலைவர். ஆதித்தனர் கல்லூரி,
திருச்செந்தூர்.

அணிந்துரை :

டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்,
எம்.ஏ., எம்.லிட்., பி. எச்டி., டி பில், (ஆக்சன்)
பொருளியல் துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்
(Indian Economy before British Rule)

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருமுன் இருந்த இந்தியப் பொருளாதார நிலையும், அவர்தம் வருகைக்குப் பின்னர் அப் பொருளாதார அமைதி எப்படியெல்லாம் சீரழிந்தது என்பதும் பற்றி விளக்குகிறது இச் சிறு நூல். ரூ. 5-00

பொருளாதார அமைப்புக்கள் (Economic Systems)

முதலாளித்தவம், சமதர்மம், கூட்டுப் பொருளாதாரம் ஆகிய மூவகைப் பொருளாதார அமைப்புக்கள் பற்றிக் கூறுகின்றது இந்நூல். நூலின் இறுதியில் மாதிரி வினாத்தாள், பொருளியல் பொன்மொழிகள் ஆகியனவும் சேர்க்கப்பெற்றுள்ளன.
ரூ. 4-00

வருவாயும் வேலைவாய்ப்பும்
(National Income and Theory of Employment)

இந்தியாவில் நாட்டு வருவாய்க் கணிப்பு, வேலை வாய்ப்பும் வேலை இன்மையால் விளையும் சிக்கல்களும், வருவாய் ஏற்றத் தாழ்வுகள், நம் நாட்டில் எங்ஙனம் வருவாய் பகிர்வு செய்யப் படுகிறது என்பன இந் நூலின்கண் விளக்கப்படுகின்றன.
ரூ. 4-00

MAGNIFICENT MADURAI
—Yogi. Shuddanda Bharati

மதுரை மாநகரில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பற்றிய கருத்துக்களும், மதுரையின் தெய்வீக மாண்பும், தமிழரல்லாத வெளிநாட்டினர் படித்து மகிழும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது இவ்வழகிய சிறு நூல்.
ரூ. 2-00

அப்பர் அச்சகம், சென்னை-1.